தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 5 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, தை 18 (31-1-'59). சனிக்கிழமை | இதழ் 33

மழை தாரையாகப் பொழிகிறது. சுழற்றிக்கொண்டு வீசும் காற்றில் சாரல் சிதறுகிறது. முற்றத்தில் குமைந்த ஈரத்தில் நீர், குமிழிகளாக உலர்ந்தது. ஒவ்வொரு குமிழியிலும் மழையின் நிழல் தெரிகிறது. கணநேரத்தில் குமிழி உடைந்து நீரோடு நீராகக் கலந்தே போகிறது.

பெரிய குமிழி ஒன்று மிதந்து வருகிறது. தாழ்வாரத்தில் அமர்ந்திருந்த அவன் நிழலே அதில் சின்ன உருவாகத் தெரிகிறது.

உருவத்தின் நிழல். செயல்களுக்கு தடையான மழை. அந்த மழையின் நீர் உருவாக்கிய குமிழி. குமிழியில் உருவத்தின் நிழல்!

''அப்படியென்ருல் செயல்என்ன?'' கேள்வி எங்கிருந்து பிறந்தது? குமிழியின் நிழல் உருவிலிருந்தா?

குமிழி உலர்ந்துபோய் வெடித்தது. தொடர்ந்து மற்ருெரு குமிழி ஒழுகி வந்தது. அதிலும் உருவத்தின் நிழல், கேள்வி; முந்திய கேள்விதான்!

''உன் செயல்தான் என்ன?''

''நான் மாபெரும் சாதனை ஒன்றைச் சாதிக்கப்போகிறன்! வசுமதியைத் திருமணம் செய்துகொள்ளப் போகிறேன்.''

மனம், குமிழியின் கேள்விக்கு மசிந்துவிட்டது.

''வசுமதி! அத்தனை அழகானவளா அவள்?''

''அழகானவள்!''

''வெளியழகில் மயங்கிஞய் என்று சொல்.''

''வெளி அழகோ, உள் அழகோ? பதிஞேரு மாத காலமாக நான் அவளைப் பார்க்கிறேன். அந்தக் காலவரையின் பார்வைப் பழக்கம் விருப்பத்தை வளர்த்தது என்று நினைக்கிறேன்.''

''முன்பின் சிந்தியாத விருப்பம். இல்லையா?''

''இதில் என்ன முன்னும் பின்னும் பார்க்கவேண்டியிருக்கிறது. விரும்பினேன். விரும்பிஞள். வாழப் போகிருேம்.''

''ஜாதியில் உயர்ந்த அவளும், கீழ்நிலையினஞன நீயும் எப்படி வாழ்க்கைஅமைக்கப்போகிறீர்கள்?''

...சிரிப்பு...

''என்ன சிரித்துவிட்டாய்?''

''நாம் இருப்பது சீர்திருத்த உலகம் என்பதையும் மறந்து எப்படி வாழப்போகிறீகள் என்று கேட்டால் சிரிக்காமல் என்ன செய்வது?''

''சீர்திருத்தமா?''

சிரிப்பு-சிரிப்பு-சிரிப்பு.

''இப்படி விழுந்து விழுந்து சிரித்தால் விஷயம் விளங்கிவிடுமா?''

''ஏன்-நம் சீர்திருத்தத்தில் என்ன குறை?''

''குறை எதுவும் இல்லை. புதிய செயல்களில் குறை காணமுடியாத அறிவுபெற்றவர்களாக நம்மைச் சூழ்ந்தவர்கள் இல்லையே.''

''அதற்காக நாம்கூட அதைச் செய்யலாகாது என்று என்ன கட்டாயம்?!'

''கட்டாயம் எதுவுமில்லை. நீ உன்னைப் பற்றி எண்ணிப்பார். நீ யார்? உன்னை பெற்றவர்கள் யார்?''

''என் தந்தையும் தாயும் கலப்பு மணம் செய்து கொண்டவர்கள்தான். அவர்கள் வாரிசான நான், என் தங்கையின் திருமணத்தை நடத்தி வைக்க வருந்த வேண்டியிருந்தது.''

''அப்படி வருந்தியதும் இந்தச் சீர்திருத்த உலகில்தானே?''

''ஆமாம். கடைசியில், பொய்யில் எல்லாவற்றையும் மறைத்துவிட்டு அவள் திருமணத்தைச் செய்து முடித்தேன்.''

''அது ஒருநாள், திரையைக் கிழித்துக்கொண்டு பல்லிளித்துவிட்டால், அவள் வாழ்க்கை?''

''உம். சிந்திக்க வேண்டிய விஷயந்தான். அதற்காக என் செயலில் யாரும் குறுக்கே வரமுடியாது. நாளைய வினை நாளை. எத்தனையோ உயிர்ப்பலிகளும் வேதனைகளும் கலந்துதானே லட்சியம் உருக்கொள்கிறது. நாளை, அல்லது பத்துத் தலைமுறைக்கு அப்பால் உள்ள நேரான ஒரு சமுதாய அமைப்பிற்கு இன்று நம் வேதனையும் தோல்விகளும் வளமாக அமையட்டும் என்று க்ருதிச் செய்கிறேன்.''

''அப்படி உயர்ந்த கருத்துடையவன் உன் தங்கையையும், உன்னைவிடத் தாழ்ந்த இனத்தவன் ஒருவனுக்கு மணமுடித்திருந்தால் இன்று நீ செய்யப்போகும் சீர்திருத்தத்திற்கும் முன்மாதிரியாக விளங்கியிருக்குமல்லவா?''

''உம்......?''

''என்ன ஆழ்ந்துவிட்டாய்? அகப்பட்டுக்கொண்டாயா? அவ்வளவுதான். அதஞல்தான் சிந்திக்க வேண்டுமென்று சொன்னேன். தாயும் தந்தையும் செய்தார்கள் என்று நிமிர்கிருயே அந்த வேதனை உனக்குத் தெரியுமா?''

''தெளிவாக நினைவில்லை.''

''சொல்கிறேன். கண்ணை மூடிக் கொள். உம். ஆயிற்று? ஒரு பெண் அல்லது ஆண், ஒருவர் மேல் ஒருவர் கொள்ளும் ஆசை யென்பது என்ன? நீ இடையே பதில் சொல்லிக் குட்டை குழப்பவேண்டாம். நல்லதோ தீயதோ நான் நினைவை அடுக்குகிறேன். ஒரு கதையாக வேண்டுமாஞலும் சுவைக்கப் பக்குவமாக்கிவிடு. என்ன, சரிதானே?''

2

தீராத மழை கவிந்து இருண்டது. நீர்க்குமைவில், மனதின் கதை சொல்லும் குமிழிகள் ஒன்றன்பின் ஒன்ருக நினைவை அடுக்கி வெடித்து உலர்ந்தன. மனதை, குளிரில் நட்டுக்கொண்டு அசையாதுஅமர்ந்து கவனித்தான், அவன்.

''சரி, கதை ஆசையைப் பற்றியல்லவா கேட்டேன்? பருவம்தான் ஆசையை விரிக்கிறது. மூப்பு என்பதற்கு ஆசையும் கவர்ச்சியும் இல்லை. பாக்குமரத்தின் ஒடிந்து சாய்ந்து கருகிய ஓலை; அதே மரத்தின் தலைப்பில் பச்சைநிறப் பாளையினுள் இதழ் சுருக்கிய தளிர் - பழுப்பு மாருத தளிர். இரண்டில் எது கவர்ச்சியானது? மலராத ரகசியத்தின் தளிர்தானே கவர்ச்சியானது. இந்தக் கவர்ச்சியின் ரகசியந்தான் விருப்பத்தின் முதற்படி. இளமையின் புதிய தெளிவில் கருத்தற்ற ('கருத்தற்ற' என்று சொல்லவும் கூடாது) ஆசை பிறந்து விடுகிறது. அது கால காலமாக உள்ளது. அல்லது, மனித உலகின் வளர்ச்சியின் ரகசியமே அதில்அடங்கியது, என்று வேண்டுமாஞலும் ஞானியைப்போல் சொல்லி விடலாம்.''

''ஞானி என்றேனே? ஆமாம். வேதநாயகம் ஒரு ஞானியாக இருந்தார். அவர்தான் உன் தந்தையின் மூத்தவர். பெரியவர். பெரியவர் என்ருல், வளர்த்தியிலும் பெரியவர். அறிவிலும் பெரியவர். மௌனமான அறிவு! அதைச் செய், இதைச்செய் என்று உத்தரவு செய்யமாட்டார். 'நான் இவ்வழி' என்று நடந்துகாட்டுவார். ஆறடியோ, அதற்கு இரண்டு விரல் மேலேயோ உயரமான வளர்த்தி. கம்பீரமானவர். அடர்த்தியான புருவங்களில் பேச்சு ஊர்வது போல் தோன்றும். குடுமி வைத்திருப்பார். பரந்த நெற்றியில் சுளிவுகள் ஓய்ந்த வெறுமையை யாருமே கண்டதில்லை. நல்ல கறுப்புமேனி. துண்டும் வேஷ்டியும் தான் 'பூஷணமான'வைகள்! வீட்டில் அவருக்கும் மூத்தவளான மாலையம்மாள்கூட அந்த மௌன கம்பீரத்தின்முன் வார்த்தை வைத்ததில்லை. திண்ணைச் சார்போடு அமைந்த அறையில் பெரிய பெரிய புத்தகங்களை விரித்து வைத்துக்கொண்டு பொழுதெல்லாம் தோய்ந்து போய் வீற்றிருப்பார். மாலையில் தோட்டத்திற்குப் போய் விடுவார். பலாமரங்களின் வட்ட வட்டமான இலைகளிலும் தென்னையின் விரல் நீண்ட ஓலை நுனிகளிலும் கமுகின் குலைவிரிந்த வினைவுகளிலும் பார்வையை ஒற்றி ஒற்றி வெகுநேரம் உலவுவார். கொத்தியும் கிளைத்தும் வேலையாட்கள் பிரியும் போதுதான் நினைவு மீண்டு வரும். 'ஐயாவுக்கு அம்மா போனதிலிருந்து இப்படித்தான்!' என்ற முடிவு, வேலையாட்களுக்கு! மூன்று பெண்களை அவருக்காக விட்டுவிட்டு, துணை வந்தவள் நினைவுமட்டுமாகிப் போய் விட்டாள். பிறகு சோகமும் வெறுமையும் தான் நாட்களாகவந்தன.''

3

''சற்றுப் பொறுமையாக எல்லாவற்றையும் கவனி. அவசரத்தில்

— 4-ம் பக்கம் —

பொருள் புரியாது விளைந்த புலம்பலா?

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை விளக்கத்தைப் புரிந்து கொள்ளாதவர்களில் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்கள் முதலிடம் பெறுகிறார்கள் என்பதைத் தங்களின் எழுத்துக்களில் உறுதிப்படுத்தி வருகிறார்கள். கம்யூனிஸ்டுகளின் கள்ளத்தன வாழ்க்கையைக் கழகத்தவர் கணக்கிட்டுக் காட்டுவதால் அவர்கள் பலப்பல கோணங்களிலிருந்து சுடுசொல் வீசுகிறார்கள்; ஆத்திரப்படுகிறார்கள்! டில்லித் தலைவர்களின் சேவடி தாங்கி நிற்கும் ஜனசக்தியார்களுக்குக்கூட மானஉணர்ச்சி வருகிறது சில சிக்கலான கேள்விகளைக் கேட்கும்போது! ஜனசக்திப் பிரியர்களுக்கோ கம்யூனிஸ்டுகளைத் தவிர வேறு எவரும் இலட்சியப் பற்றுக் கொண்டவர்களாகத் தென்படுவதில்லை. மாற்றார்சொல்லுகின்ற மறுப்பிலே உள்ள உண்மையை ஒத்துக்கொண்டவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியிலே இன்னும் ஒட்டிக்கொண்டிருக்கிறார்களா என்றால் சான்றுக்கு ஒரு ஆள் கிடையாது! வடநாட்டிலேயிருக்கும் அஜய்கோசும், ரணதிவேயும், ஜோஷியும் எழுதும் ஆங்கிலக் கட்டுரைகளை மொழிபெயர்த்து வெளியிட மட்டுமே தகுதி படைத்தவர்கள்தான் தமிழ்நாட்டுத் தலைவர்கள். கம்யூனிஸ்ட்களுள் 'தமிழ்நாட்டுத் தலைகள்' ஏதாவது எழுதி அதை வடநாட்டுக் கம்யூனிஸ்ட் ஏற்றுக்கொண்டான்-படித்து மகிழ்ந்தான் என்பதற்கு இன்றுவரையிலும் ஆதாரம் கிடையாது! ஜனசக்திக்காரர்கள், நிர்வாகப் பொறுப்பிற்கு மட்டுமல்ல. சில கருத்துரைகள் சொல்வதற்குக்கூட லாயக்கற்றவர்கள் என்பதைப் புதுடில்லிக் கம்யூனிஸ்ட்கள் நன்கு தெரிந்துவைத்திருக்கிறார்கள். ஜனசக்திக்காரர்களையும் பாராட்ட அவர்களை மட்டுமே நம்பியிருக்கிற அப்பாவிக்கம்யூனிஸ்ட்கள் தமிழகத்தின் பல பகுதிகளிலே சிதறியிருக்கிறார்கள் இவர்களுக்கெல்லாம் ஜனசக்திக்காரர்களின் கண்டிப்பான கட்டளை திராவிட முன்னேற்றக் கழகத்தவரிடம் ஏதாவது ஒரு வலுச்சண்டையை வளர்த்துக்கொள்ளுங்கள் என்பதுதான்! வாய்ச்சண்டையில் மட்டுமல்ல எல்லா வகையிலும் முயன்று பார்க்கிறார்கள். 'டாங்கே எங்கே' என்ற கட்டுரையைக் கண்ட ஒரு கோவை காஞ்சிபுரத்துக் கம்யூனிஸ்ட் "இன்றுள்ள எங்கள் பணி தி. மு. கழகத்தை ஒழித்துக்கட்டுவது தான்" என்று எச்சரிக்கைக் கடிதம் அனுப்பியிருக்கிறார்! இதைக் கண்ட போது வியப்படைய முடியவில்லை. காரணம் தலைமைப் பீடத்திலேயிருக்கும் கம்யூனிஸ்டுகளுக்கே கழகத்தைத் தீர்த்துக் கட்டுவது ஒரு கடமையாக இருக்கும்போது கடைசித் தரக் கம்யூனிஸ்டுகளைப் பற்றி எப்படி நாம் கவலைப்பட முடியும்? 23-1-59 இதழ் 'சனசக்தி'யில் அந்தப் பத்திரிகையின் உதவி ஆசிரியர் என்று கருதப்படுபவர், தன்னுடைய துருப்பிடித்த மூளையின் அரசியல் தெளிவைத் தெரிவித்துள்ளார். அவர் எடுத்துக்கொண்ட குற்றச்சாட்டான, "கழகம் அந்நியர் உதவியை நாடுகிறது" என்ற செய்தி, மிக மிகப் பழுதுபட்ட கந்தல் துணி! கம்யூனிஸ்டு தலைவர்கள் அடிக்கடி சொல்லி மகிழ்ந்த சொல்லோவியம்! புரிந்துகொள்ளும் திறனற்று உளறிக்கொட்டியிருக்கும் உரைகல் வீரரை எடைபோட்டுப் பார்ப்போம்!

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் பேசிய பேச்சுக்களைத் திருப்பிச் சொல்வதற்குக்கூட வகையற்றுப் போனவர்கள் பலர் இருக்கிறார்கள்; அவர்களுடைய அறிவுத் தெளிவு, அறிஞர் அண்ணாவின் அழகு மொழியையும் அடுக்குத் தொடரையும் அப்படியே திரும்பச் சொல்ல முயன்றால், சங்கரன் நம்பூதிரிபாத் நடையிலே திக்கித் திக்கித் தடுக்கு மொழியில்தான் சொல்லமுடியும். அந்த ரகத்தில் இணைக்கப்பட்டிருக்கும் ஜனசக்தியின் மாஜினி தெரிவிக்கிறார் தி. மு. க. தலைவர்களின் பேச்சு முன்னுக்குப்பின் முரணாக இருக்கும் என்று இவர் ரெங்கசாமியாக மதுரை மேல மாசி வீதியில் கவனிப்பாரற்று அலைந்து கொண்டிருந்தபோது கல்யாணக் கூட்டங்களில் பேசுவதற்குக்கூட லாயக்கற்றவர். வாய் திறக்க இரண்டு ஆள் வேண்டுமாம். கையும் காலும் உதறல் எடுக்குமாம். அவருடைய 'சொல்மாரி'யைக் கேட்டவர்கள் இன்னும் சொல்லிச் சொல்லி சிரிக்கிறார்கள்! ஆனால் சோசலிஸ்ட் சட்டையைக் கழற்றி எறிந்துவிட்டு வம்பானந்தப் பாகவதரிடம் சீடராகிவிட்டவுடன் முன்னேற்றக் கழகத்தவர் பேச்சைக் கேலி செய்யத் தைரியம் வந்துவிட்டது! கட்டபொம்மனைப்பற்றிக். கலைஞர்கருணாநிதியும் விருதை நண்பர் ஆசைத்தம்பியும் மாறுபட்ட கருத்துக்களைச் சொன்னதாக ஒரு சரடு விட்டார். அவர்கள் இருவரின் பேச்சையும் எழுத்தையும் எடுத்துக் காட்ட, கம்யூனிஸ்ட் மூளைகளுக்குப் பலம் இருக்கிறதா என்பது பலப்பல ஆண்டுகளாக, சந்தேகத்துக்குரியதாகும். அகில இந்திய சிந்தாபாத் காம்ரேடுகளுக்கு, கட்டபொம்மனைப்பற்றிய கவலை வந்தது ஏன்? தமிழரசுக் கழகத்தின் ஆதரவில் கட்டபொம்மன் விழாவில் பேசிய இராமமூர்த்திகட்டபொம்மனைப்பற்றிப் பேச முடிந்ததா? பஞ்சாலைப் பிரச்னையிலிருந்து தேவிகுளம் மூணார் தோட்டத் தொழில்வரை யோசனைகள் தருகின்ற அந்த 'செந்நாப் புலவர்க்கு' ஏன் கட்டபொம்மனுடைய வரலாற்றை ஒழுங்காகச் சொல்லத் தெரியவில்லை? மாஜினிகள் கேட்டதுண்டா? கருணாநிதியும் ஆசைத்தம்பியும் முன்னுக்குப்பின் முரண்பட்டவர் என்றால் அகில இந்தியக் கண்ணோட்டம் வைத்திருக்கிறஇராமமூர்த்தி தென்னாட்டு வீரன் கட்டபொம்மனுடைய கால் வருடியது ஏன்? திராவிட முன்னேற்றக்கழகத்தவரின் பேச்சு முறையற்றதென்றால் கம்யூனிஸ்ட்களுக்கு, எப்பொருள் பற்றியும் பேசுகின்ற நெறியுண்டா? தோழர் இராமமூர்த்திசென்ற ஜனவரி (1958) ஏழு அல்லது எட்டாம் தேதியில் 'மதுரைக் கல்லூரி'யில் 'ஜனநாயகம்' என்ற தலைப்பில் பேச ஒப்புக்கொண்டார் -பேசினார். அந்தத் தலைப்பினின்றும் தவறாமல் பேசமுடியாமல் திணறிப் போனார். தனக்கேயுரிய ஏகாதிபத்தியத்தையும் முதலாளித்வத்தையும் எடுத்துக்கொண்டார் கல்லூரி மாணவர்கள் கைக்குட்டை வைத்துச் சிரிப்பைமறைத்துக்கொண்டார்கள்! இந்தச் சொல்லழகர்கள் அண்ணாவும் பி. பா. அவர்களும் முரண்பட்டவர்கள் என்பது இவர்களது அரசியல் ஊமைத்தன்மையையும் ஊனத்தன்மையையும் தெரிவிப்பதாகும்!

தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்களுக்குக் கைக் கருவியாக இருப்பது ஜனசக்தியார்களின் பொன்மொழிகள். பொய்யுரைகளைப் பிரித்துப் பார்க்கும் பக்குவம் செங்கொடியாளர்களின் பரம்பரையிலேயில்லாத வழக்கம் என்பதை மாஜினிகள் தெரிந்துகொண்டிருப்பதால் புரிந்துகொள்ளாத வரைக்கும் தாங்களே அந்த வட்டாரத்தில் பேரறிஞர்கள்-தத்துவ ஞானிகள் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்! அகில உலக எழுத்தாளர்களுக்கெல்லாம் தானே வழிகாட்டி என்று எழுதிக்கொண்டிருந்த மாயாண்டி பாரதியைக் காணோம் பல நாட்களாகவே! ஈட்டி முனை வீரன் முத்தையா வடநாட்டுக்குப் போயிருப்பதால் திரும்பி வரும்வரை மாயாண்டி பாரதி நடையில் கழகத்தின் மீது உள்ளத்துக் குடைசலையெல்லாம் கொட்டிக் காட்டிவிடத் துணிகிறார் ரெங்கசாமி. முத்தையா வந்துவிட்டால் இவர்மூலையில் தள்ளப்படுவார்! இந்தத் தீரன் சொல்கிறார். "'திராவிடன்' ஆசிரியர்என்.வி. என். அவர்களும் சி. பி. சி. அவர்களும் வெளிநாட்டானை அழைத்து வந்துவிட்டார்கள். அந்நிய உதவியைக் கொண்டு நாட்டைப் பிரிக்கப் போகிறார்கள்என்றெல்லாம்கேள்வி." பதிலைத் துணையாக வைத்துக் குறிப்பிடுகிறார். இந்தியக் கம்யூனிஸ்ட்கள் இங்கே உட்கார்ந்து எழுந்திருப்பதற்கும்சிரிப்பதற்கும்கூட. மாஸ்கோவிலிருந்து உத்தரவுகளை எதிர்பார்த்துக்கொண்டிருப்பவர்கள் என்பது உலகறிந்த உண்மை! அந்த மயக்கத்தினால்தான் அந்நிய உதவி வருகிறதென்று கழகத்தின்மீது கல்லெறிகிறார்கள்! பிரிட்டிஷ்காரனும்-அமெரிக்க வீரனும் அணுசக்தி ஆயுதங்களுடன் எங்களுக்குத் துணையாக வருவார்கள் என்று சிற்றரசு பேசவில்லை-என். வி.நடராசன் நவில்வில்லை! அந்நியர் உதவியென்றால் அதற்குப் பெயர் படை அனுப்புதலா? மார்க்சீய மூளைகளின் துடிப்பை மிக மிகச் சந்தேகிக்கும் வகையில் கேள்வி தருகிறார் உரைகல் வீரர்! ஒரு நாட்டில் விடுதலை உரிமையைப்பற்றி உலகத்தின் பல பகுதியினரும் வாய் திறந்து சில வார்த்தைகள் பேசி ஆதரிப்பதுகூடத் தான் அந்நிய நாட்டவரின் உதவியாகும்! வடநாட்டு ஆதிக்க வெறியர்கள் தங்களது ஆணவப்போக்கை மாற்றிக்கொள்ளத் தவறினால் அடிமைப்பட்டுள்ள மக்களின் விழைவுக்கு எந்தத் திக்கிலிருந்தும் ஆதரவு கிடைக்கும்! மனித குலத்திற்கும் மாநிலத்திற்கும் பாதுகாப்புத் தரும் பரந்தாமன் ருஷியா ஆதரிக்காதா? அந்நிய நாட்டு உதவியென்றால் அமெரிக்காவையும் இங்கிலாந்தையும் நினைக்கின்ற நெஞ்சங்களே-மாஸ்கோவின் மனம் திறந்த சில மணி மொழிகள் வரக்கூடாதா? தென்னகம் பின்தங்கிய பகுதியென்று குருச்சேவ் - புல்கானின் இங்கே வந்தபோது சொல்லவில்லையா?

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியத்தையும் செயல் முறைகளையும் மிக மிகக் குறைந்த அளவு அரசியல் அறிவு பெற்றிருப்பவரும் எளிதில் உணர்ந்துகொள்ள முடியும் உண்மையில் அதனைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டுமென்ற அவா இருக்குமானால்! இந்தியக் கம்யூனிஸ்டுகள் உபகண்டத்தின் பல பகுதிகளிலும் நடைபெறும் பிரிவினைக் கிளர்ச்சியையும் சுயநிர்யண மாகாண உரிமைகளையும் பரிபூர்ணமாக ஆதரித்துப் பேசத் தூக்கத்திலும் மறுப்பதில்லை. ஆனால் இவர்களுடைய ஏகஇந்தியக் கனவிற்கு முற்றுப் புள்ளி வைத்திருக்கும் திராவிடத் தனியரசுக் கொள்கை கற்பனையாகத் தென்படுகிறது. 'திராவிடன்' ஆசிரியர் தந்த விளக்கம் ஜனசக்தியார்களைத் துடித்திடச் செய்ததும் அதனால்தான்! அந்தச் சிறு குறிப்பு ஆங்கில அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளுக்குத் தரப்படும் அன்பழைப்பு என்று பொருளற்ற முறையில் வாதிக்கத் துணிவதும் அவர்களின் நுண்ணறிவுக்கு ஒரு பரிசோதனையாகும்! அமெரிக்கா பாகிஸ்தானுக்கு அளித்து வரும் இராணுவஉதவியைநினைவூட்டுகிறார். அங்கேயிருக்கிற அயூப்கான் ஆட்சிக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆலோலம் பாடுவதாகவும் கீதமிசைக்கிறார் நொண்டித்தன அரசியலிலே அடிக்கடி வழுக்கி விழுந்துவிடுகிற மாஜினி! பாகிஸ்தான் இராணுவ ஆட்சியை இந்தியக் கம்யூனிஸ்டுகள் எதிர்ப்பது இந்தியாவின் மீது கொண்டுள்ள பாசமல்ல; மாஸ்கோவுக்கு எதிராக கராச்சி நிற்கிறதே என்ற ஏக்கம்தான்! தங்கள் தந்தையர் நாட்டுக்கு இங்கே ஒரு களம் கிடைக்கச் செய்ய வேண்டுமென்பதற்காகவே இந்தியக் கம்யூனிஸ்டுகள் பாகிஸ்தானைப் பார்த்து பயங்கரச் செய்திகளைத் தருகிறார்கள்! பி. சி. ஜோஷிக்கள் "ஆராய்ச்சி யுரைகளை" - தேவையில்லாதவைகளை அனுப்பிக்கொண்டுள்ளார்கள்! கராச்சியில் மக்களாட்சிப் பண்பு கொலைக்களத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட சோக நிகழ்ச்சியை மறந்துவிடவில்லை. மக்கள் மன்றத்திலே சொல்லத் தவறவும் இல்லை! இந்தோனேஷியா விவகாரத்திலும் அங்கே உள்நாட்டில் விடுதலை வேட்கை கொண்டவர்கள் இன்றைய ஆதிக்க வெறியர்களைத் தூக்கியெறியத் துணிந்ததையும் நடுநிலையுடன் நின்று திராவிட முன்னேற்றக் கழகம் விமர்சித்தது. ஆனால் அங்கே புரட்சி நடத்தியவர்கள் கம்யூனிஸ்டுகளுக்கு இடந்தர

— 11-ம் பக்கம் —

மரணப் படுக்கையில் மாஜினி

நெஞ்சம் பொறுக்காது வந்த எரிச்சலா?

தென்றல்

திருக்குறளில் அரசியல்

அ. கி. பரந்தாமனார், எம். ஏ.

அரசாங்கத்துக்கு அக்காலத்தில் செலவு இக்காலத்தைப்போல இருக்கவில்லை. பண்டை அரசாங்கம் சாலை அமைத்ததா? நெடுஞ்சாலை போட்டதா? கல்விக்கூடங்கள் அமைத்துப் பணவுதவி செய்ததா? அமைச்சர் முதலான அலுவலர்களுக்குச் சம்பளம் கொடுத்தது; புலவர்களுக்குப் பொருள் கொடுத்தது. இவ்வளவுதான். ஏன் இவ்வளவு வாங்கியது? அடிக்கடி போரில் ஈடுபட்டிருந்த காரணத்தால் மக்கள் பாடுபட்டுத் தேடிய பொருளில் ஆறில் ஒரு கடமை வாங்கியது பண்டை அரசாங்கம் எனலாம்.

படை

படை, அரசின் உறுப்புக்களுள் இன்றியமையாத ஒன்று. நாட்டின் பாதுகாவல், படை காட்டும் வீரத்தில் அமைந்திருந்தது. தேர்ப்படை, யானைப்படை, குதிரைப் படை, காலாட்படை ஆகிய நால்வகை, படைகள் இருந்தன. அரசனுடைய உறவினர்கள் கொண்ட மூலப் படையே உயர்ந்த படையாகும். திருக்குறள்,

"சிறுமையும் சொல்லாத்
துணிவும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை"

என்று கூறுகிறது. படையானது தான் தேய்ந்து சிறிதாகலும், மகளிரை வெளவல், இழிவாயினவற்றைச் செய்தல் முதலியவற்றால் உண்டாகும் வெறுப்பும், வறுமையும் இல்லாதிருக்குமானால் படை பகையை வெல்லுமாம். படைக் குறைப்புக்கூடாது என்கிறது திருக்குறள். இக்காலத்திலும் நாடுகள் படைகளைக் குறைக்காமல் பெருக்கி வருவதைக் காண்கிறோம். அக்காலத்தில் படைக் குறைப்பு எப்படி முடியும்? படைக்குறைப்பு ஆபத்து என்பது வள்ளுவர் கருத்து. படைக்கு ஒழுக்கமும் வேண்டும். பெண்களைத் தூக்கிச் சென்று கற்பழித்தல் முதலான ஒழுக்கக் கேடு படை வீரர்களுக்குக் கூடாது. வறுமை நிலையும் படைகளுக்கு இருத்தலாகாது. அதனால்தான், இக்காலத்தில் உணவு கொடுத்து உறையுள் கொடுத்து உடை கொடுத்து இவற்றிற்கு மேலாகச் சம்பளம் கொடுத்து அரசாங்கங்கள் வீரர்களைப் போற்றிப் பாதுகாக்கின்றன. வீரர்கள் கவலையின்றி வாழ வேண்டும். படை வீரர்கள் அறத்தினின்று பிறழாது ஆயுதம் இழந்தவரிடமும் புறங்காட்டி ஓடுபவரிடமும் அருள் காட்ட வேண்டும்.

நட்பு (Allies)

திருக்குறளில் நட்பு என்பது மக்கள் கொள்ளும் நட்பல்ல; ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் உள்ள நாட்டு நட்பு. இது ஓர் அரசனுக்கும் மற்றோர் அரசனுக்கும் போரில் உதவி செய்யக்கூடிய நட்பாகும். மக்கள் கொள்ளும் நட்புக்கு ஏற்றனவாகக் குறட்பாக்கள் அமைந்திருப்பினும் நேச நாட்டு நட்பையே அவைகள் கூறுகின்றன என்றறிக. பரிமேலழகர், "இனி அப்படைபோல அரசனுக்கு வினையிடத்து (போரில்) உதவுவதாய நட்பினை ஐந்து அதிகாரம் விதிமுகத்தானும் பன்னிரண்டு அதிகாரம் எதிர்மறை முகத்தானும் கூறுவான் தொடங்கி" என்று விளக்குவதனால் இவ்வுண்மை புலனாகும். "செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல் வினைக்கரிய யாவுள காப்பு" என்னும் குறளும், கூடா நட்பு என்னும் அதிகாரத்தில்உள்ள "தொழுத கையுள்ளும் படையொடுங்கும்; ஒன்னார் அழுத கண்ணீரும் அனைத்து" என்னும் குறளும் மேலும் இவ்வுண்மையை வலியுறுத்தும்.

தூதுவர் (Ambassador)

இதுகாறும் அரசின் ஆறுஉறுப்புக்களைப்பற்றியும் அரசனுக்கு இருக்க வேண்டிய இயல்புகளைக் குறித்தும் அறிந்தோம். இனி அரசாங்கத்தின் வேறு துறைகளைப்பற்றித் தெரிந்து கொள்வோம். தூதுவர் அமைச்சர் நிலையில் உள்ளவர். அமைச்சருக்கு இணையான நிலையில் தூதுவரைத் திருக்குறள் கருதுவதாகக் கொள்ளலாம். வகுத்துக் கூறுவான், கூறுவது கூறுவான் எனத் தூதுவர் இருவகைப்படுவர். தூதுவன் தூய்மையும் துணைமையும் துணிவும் வாய்மையும் இயற்கைஅறிவும் நூலறிவும் ஆராய்ந்தகல்வியும் தோற்றப் பொலிவும் உள்ளவனாக இருக்க வேண்டும். தனக்கு ஏற்படக்கூடிய துன்பத்துக்கு அஞ்சாமல் தன் அரசன் கூறியதை

***

திராவிடர் திருநாளன்று தம் வாழ்த்துக்களை அனுப்பிக் களிப்பூட்டிய அனைவருக்கும் என் நன்றியும் வணக்கமும் உரித்தாகுக.

அன்பன்

கண்ணதாசன்

***

வேற்றரசனிடம் சொல்லவல்லவனாகவும் இருக்கவேண்டும். சொல்வன்மையும் வேண்டும். இவன் தன் சுற்றத்தாரிடத்து அன்புடையனாகவும் அமைச்சு பூணற்குரிய குடியில் பிறந்தவனாயும் அரசர் விரும்பும் பண்புடையனாயும் இருப்பது அவசியம்.

அரசின் உள்நாட்டுக் கொள்கையும் (Home policy) வெளிநாட்டுக் கொள்கையும் (Foreign policy)

ஒவ்வோர் அரசுக்கும் வெளிநாட்டுக் கொள்கை என்றும் உள்நாட்டுக் கொள்கை என்றும் உண்டு. திருக்குறளின் பொருட்பாலில் காணும் உள் நாட்டுக் கொள்கை அறநெறி பிறழாது, ஏழையின் அழுகண்ணீருக்கு ஆளாகாது, மக்கள் நல்வாழ்வு கருதிச் செங்கோலாட்சி புரிவதேயாகும். வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரையில் "எந்தச் சண்டைக்கும் போகாதே; வந்த சண்டையை விடாதே" என்பதுதான். நாடு பிடிக்கும் விருப்பம் சிறிதும் இல்லை. வெளி நாட்டின் மேல் பகையும் இல்லை. பகையிருந்தால் முளையிலே கிள்ளியெறிய வேண்டும். இதில் என்ன தவறு இருக்கிறது? சங்க காலத் தமிழகத்தில் அரசுகளுக்கு நாடு பிடிக்கும் ஆவல் இருந்தது.

"வையம் காவலர்
வழிமொழிந்து ஒழுகப்
போகம் வேண்டிப்
பொதுச்சொல் பொறுஅது
இடம்சிறிது என்னும்
ஊக்கம் துரப்ப
ஒடுங்கா உள்ளத்து
ஓர்பா ஈகைக்
கடந்தடு தானைச்
சேரலாதனை"

என்று சேரமான் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடியிருப்பதிலிருந்து நாடு பிடிக்கும் ஆவல் சங்க காலத்தில் இருந்ததை அறியலாம். திருக்குறளோ பகைமை கூடாது என்று வற்புறுத்துகிறது. கீழ்வரும் பாக்களைக் காணுங்கள்: உண்மை விளங்கும்.

"இகல் என்ப எல்லா
உயிர்க்கும் பகல்என்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய்"

"இகல் என்னும் எவ்வநோய்
நீக்கின், தவல் இல்லாத்
தாவில் விளக்கம் தரும்."

"இன்பத்துள் இன்பம்
பயக்கும் இகல்என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்."

"இகல்எதிர் சாய்ந்தொழுக
வல்லாரை யாரே
மிகல் ஊக்கும் தன்மை யவர்?"

இக்குறட்பாக்கள் வீண் பகை கொள்ளாது அமைதியாக வாழ வேண்டும் என்பதைக் குறிக்கவில்லையா? வெளி நாட்டுடன் நல்லுறவு கொள்ள வேண்டும் என்பதே திருக்குறள் பொருட்பாலில் காணும் வெளி நாட்டுக் கொள்கையாகும்.

பிற கொள்கைகள்

மதுவிலக்கு (Prohibition), பரத்தைமை ஒழிப்பு, சூதாட்ட ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, பிச்சை எடுத்தல் ஒழிப்பு ஆகிய இவற்றை மேற்கொள்வது அரசின் கடமைகள் என்று திருக்குறள் கூறுகிறது. இன்று உலக அரசாங்கங்கள் இவற்றை நிறைவேற்ற முயன்று வருகின்றன. ஆனால், திருக்குறள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இக்கருத்துக்களை வெளியிட்டிருப்பது நம்மை வியப்புக் கடலுள் ஆழ்த்துகிறது. வள்ளுவர் வறுமையை நினைத்து நினைத்து ஓலமிட்டிருக்கிறார்; "இன்றும் வருவது கொல்லோ நெருநலும் கொன்றது போலும் நிரப்பு" என்று கதறியழுதிருக்கிறார். "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகு இயற்றியான்" என்று 'பிச்சையெடுப்பது விதி என்றால் ஒழிக உலகியற்றியான்' என்று முழங்கியிருக்கிறார்.

நல வளர்ச்சித் திட்டங்கள் உடல் நலத் திட்டம்

திருக்குறளின் பெருமை மருந்து என்னும் அதிகாரத்தில் அமைந்திருக்கிறது. வள்ளுவர் வாழ்வை மாயம் என்று கூறவில்லை; வாழ்வாவது மாயம்; நாளை மண்ணாவது திண்ணம் என்று வேதாந்தம் பேசவில்லை. உலகம் நிலையாது, உடல் நிலையாது, செல்வம் நிலையாது என்னும் உண்மையை ஒப்புக்கொள்கிறது; அதே நேரத்தில் உலகில் உள்ளவரைக்கும்அரியஉடலைப் போற்றிப் பேண வேண்டும் என்பதை மறக்கவில்லை. நோய்க்கு மருந்து கொடுத்து நீக்குவதைப் பார்க்கிலும் நோய் வருவதற்குமுன் தடுக்க வேண்டும் என்று திருக்குறள் அரசுக்கு அறிவுறுத்துகிறது.

"மருந்துஎன வேண்டாவாம்
யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி யுணின்"

என்று கூறுவது நோயைத் தடுத்தற்கு வழியென்பது கூறாமலே விளங்கும். நோய் வாராமல் இருத்தற்குத்தக்க உணவை மிகாமலும் குறையாமலும் உண்ண வேண்டும்; ஓர் உணவு சீரணித்த பின்பு மற்றோர் உணவுகொள்ள வேண்டும். இப்படி மக்கள் செய்யாவிட்டால் நோய் உண்டாகும். இக்கருத்தை,

"மிகினும் குறையினும்
நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று"

என்னும் குறட்பா கூறுவதிலிருந்து நன்கறியலாம்.

பயிர்த் தொழில் வளர்ச்சித் திட்டம்

தமிழகம் சங்க காலத்தும் பயிர்த் தொழில் நாடு; இன்றும் பயிர்த் தொழிலை நம்பி வாழும் நாடு. தமிழகத்தில் 100க்கு 80 பேர்கள் கிராமங்களில் வாழ்பவர்கள். மக்கள் அன்றும் வறுமையால் வாடினார்கள், இன்றும் வாடுகிறார்கள். வறுமையைப் போக்குதற்கு வழி பயிர்த் தொழிலே. வள்ளுவர் எல்லாரையும் தொழிலாளராகவே கருதினார்; வீரரை வில் ஏர் உழவர் என்றார்; புலவரைச் சொல் ஏர் உழவர் என்றார். உழவருக்கு எப்படிப் பயிர்த் தொழிலை மேற்கொண்டால், என்ன என்ன செய்தால் உணவு மிகுதியாக உற்பத்தியாகும் என்று எடுத்துக் காட்டியுள்ளார்: ஏரால் ஆழ உழ வேண்டும். வயலை உழுத பின்பு மண் நன்றாக உலருமாறு செய்து எருவிட வேண்டும்; களையெடுக்க வேண்டும்; நீர் பாய்ச்சுதல் வேண்டும்; வயலுக்குரியவன் அடிக்கடி போய்ப் பயிரைக் காக்க வேண்டும். இம்முறையை

— 9-ம் பக்கம் —

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —



ஆ. மாதவன்

புரட்டிவிடா த. சீர்திருத்தம் என் கிருயே. ஒருவகையில் முதன் முதலில் உரிய வழியில் சீர்திருத்தம் செய்தவர் வேதநாயகம் தான். அதனுல்தான் விரிவாகச் சொல் கிறேன்.

"உன் தந்தை ஆவுடை, வேத நாயகத்திற்கு அடுத்தவன். உன் தாயின் பெயர் நினைவிருக்கிறதா ?"

"செல்லம் !"

"ஆமாம். செல்லம். தெற்கே மலை யாளத்திலிருந்து வந்தவள். சில்லறை வேலைகளுக்குத் தாங்கலாக இருக்கு மென்று, மாலையம்மாள் தான் அவளை அங்கிருந்து கொண்டுவந்தவள்.

"வீடு சோகத்தில் நிறைந்த காலம். வேதநாயகத்திற்கு மூன்று பெண்கள் என்றேனல்லவா ? மூத்த வள் பர்வதம் மிகவும் அடக்கமான வள். அமைதியானவள். மாலையம் மாளோ மற்று யாரேனும் உரக்கப் பேசினுல்கூட, 'ஏன் இப்படி பேசு கிருர்கள். மெதுவாக பேசினுல் என்ன ?' என்று கேள்வி கேட்கும் அடக்கம். வந்தவர்களை, ரொம்பவும் பழகியவர்களாக இருந்தால்கூட, 'வாருங்கள்' என்று கேட்கக் கூசும் அடக்கம். தெளிந்த நீரின் அடக்கம். மூடிய காற்றின் மௌனத்தில் பொதிந்த அடக்கம். சுமாரான அழகுதான். சிரித்தால்தான் சிரிப்பு. இல்லாவிட்டால் வெறுமையின் அமைதி. நிறம் மட்டும், தெளிந்த எண்ணெயில் தெரியும் தீபநாக்கின் நிறம். சலனமற்ற கண்களில் பொய்யு மில்லை; கனவுமில்லை. அப்படிப்பட்ட புதுமையை பதினெட்டிலோ பத் தொன்பதிலோ வேம்படியில், ஒரு சாதாரண மனிதனுக்கு துணையாக் கினுர்கள். குடும்ப வாழ்வின் சிறு மைக்கும் பலவீனங்களுக்கும் அந்தப் புனிதம் லாயக்கற்றதினுலோ என் னமோ இரண்டே வருட வாழ்வில் அவன் அந்தக் கணகளை அழ வைத்துவிட்டுப் போய்விட்டான். அருவி புறப்பட்ட இடத்திற்கே திரும்பி ஒடுங்கி யடங்கிவிட்டது! வாழ்ந்து அனுபவித்துக் கண் வளையத் தில் கருமையைப் பூசிக்கொண்டு வந்து சேர்ந்த வாழ்க்கை. ஏதோ முன்பே எதிர்பார்த்திருந்ததுபோல, 'அப்படியா' என்ற அடக்கத்தில் அந்த நெருப்பையும் வாரியிறைத்துக் கொண்டு, சலனமின்றிக் கிணற்றில் மூழ்கிய மௌனத்தில்-நிமிர்ச்சியும் அலட்சியமும் வளையாமல் நடந்தார், வேதநாயகம்.

"பெண் வீட்டிற்கு வந்த மறு வருடத்தில் தான் செல்லம்-ஆவுடை போக்கு மாலையம்மாள் கண்ணிற்குப் பட்டது. பர்வதத்தின் அடுத்ததங்கை முத்து கனவுப் பருவத்தில் நின்ருள். உள் அறையில் வாழ்வு நழுவிவிட்ட சோகமும். வெளியே பூத்து நிற்கும் கனவும் சுமையாக அழுத்தியபோது-'ஆவுடை-செல்லம்' பழக்கம் கண் ணிற்கு பெரும்புள்ளியாக முதலில் தோன்றவுமில்லை.

"முத்து பர்வதத்திற்கு நேர்மாருன பண்புடையவள். எதையும் வெட்டு

வெட்டென்று கேட்பாள். மனதிற்கு ஏற்காத எதிர்ப்பை பளாரென்று அடித்துவிடுவாள். அடித்துவிட்டு, 'ஐயோ செய்துவிட்டோமே' என்று அழவும் செய்வாள். செல்லமும், தங்கை ராசுவும்தான் பெரும்பாலும் இந்த அவதிக்கு ஆளாகிறவர்கள். செல்லம் எதிர்ப்பே இல்லாத நாணல் போன்றவள். இழுத்தடிக்கும் ஒழுக் காலும் அசைந்து ஊரும் அமைதி யாலும் வளைந்து கொடுக்கத்தான் தெரியும். அவள் கனவு எங்கோ புலப்படாத சூன்யத்தில்; போய்த் தொடமுடியாத எதிர்ப்பில் இருப்பது போல வெறுமையாகி இருந்தது. ராசு சிறுமி. அக்காளோடு சண்டை போடுவதற்கும், தொழுவத்தில் வந் திறங்கும் மைனவை எப்படிப் பிடிப் பது என்றுஅப்பாவிடம் யோசனைகேட் பதற்கும் செல்லத்திடம் சிறு வீடு கட்டித் தரச் சொல்வதற்குமே அவ ளுக்குப் பொழுது சரியாக இருந்தது. அத்தை வாலையம்மாள், சாப்பிடு வதற்கோ எண்ணெய் தேய்த்துவிடு வதற்கோ அழைப்பது வரையில் தோட்டத்தில் நாலுமணி செடியோடு பேசிக்கொண்டிருப்பாள். அதன் சிவப்புப் பூக்களை பறித்து உள்ளங் கையில் தேய்த்து மருதாணிக்குப் பதி

லாகச் சிவப்பாக்கிக்கொள்வாள். அல் லது கை மடக்கத் தெரியாத மரப் பொம்மைக்கு சீரெல்லாம் செய்வதில் ஈடுபட்டிருப்பாள். வெள்ளைச் சேலை புனைந்த அக்காளும் - அத்தையும், செல்லமும் யாருமே லட்சியமாகாத நாட்களும் உண்டு. அப்பாவிடம் சகல உரிமையும் அவளுக்குத்தான் !

'வீட்டில் அத்தையம்மாளின் அதி காரம்; அறையில், வெள்ளை போர்த் திய சோகத்தில் பர்வதத்தின் அசைவு; கனவும் உண்மையான முத்துவும் ராசுவும் நீர்மேல் எண்ணெய்போன்ற வேதநாயகத்தின் போக்கு எல்லாமே, படித்துக்கொண்டு வேலையற்றிருந்த ஆவுடையை மாடியில் தனியாக வைத்திருந்தனர். உணவு தண்ணீர் எல்லாம் நேரம் தவருமல் அங்கே போய்விட வேண்டும். வயதின் தளர்வு அத்தையம்மாளுக்குப் பதி லாக, செல்லத்தைஅனுப்பி வைத்தது.

"செல்லத்தைப்பற்றி எதைச் சொல்வது? அவள் உன்னைப் பெற்ற வளாகிவிட்டாள். அவளது அடங்கிய பண்போ-அல்லது தினமும் செய்யும் கடமைகளோ ஆவுடையைக் கவர்ந் திருக்க வேண்டுமென்று நாசூக்கு பேசிக்கொள்வோமே. தாய்க்கும் தந் தைக்குமான காதலைப்பற்றி மக ளுக்கு எப்படிச் சொல்வது ? முன் மாதிரியாக யாரும் சொன்னதாகவும் நினைவில்லை. எப்படியிருந்தாலும் மலை யாளத்தின் அந்தப் பெருமித அழகு ஆவுடையைக் கவர்ந்தது. அவ்வளவு தான்.

"வீட்டில் நிறைந்த பெண்ணை வெளியே அனுப்பிவிட்டு தம்பிக்கு ஒரு வழி செய்ய வேண்டுமென்று மாலையம்மாள் எண்ணியிருந்தாள். போக்கிட மற்ற செல்லத்தை சமைய லுள்ளில் மறைத்துவிட்டு, முத்துவின் திருமணத்திற்கான ஏற்பாடுகளில் கவனம் செலுத்தினுள். அதற்கெல் லாம் அவளிடத்தில் ஆண்களுக்கும் மீறிய ஆற்றல் இருந்தது. வேதநாய கத்திற்கு தோட்டமும் புத்தகங்களும் வாழ்வாகி விட்டிருந்ததுபோல, மாலை யம்மாளுக்கு குடும்பமும் அதன் நிர்வாகிகளும் பாடமாக இருந்தன. விளைவிற்கும் வரவிற்கும் எல்லாம் கணக்கு அவளிடந்தான். "ஒரு நாள் நான் மண்டையைப் போட்டுவிட்டால் இந்த சந்நியாசித் தம்பிமார்கள் எப் படி குடும்பம் நடத்த போகிருர் களோ ?" என்ற கவலையும் அவளுக் கிருந்தது. அந்தப் பெரிய உடலில் அத்தனை கவலை !

4

மழை விட்டுத் தூவானம் மட்டு மாக மிஞ்சிவிட்டது. எனினும் உயர்ந்த தென்னையும் காற்ருடி மரங் களும் ஆடி ஆடி 'வா-வா' என்று அடங்காத தாகத்துடன் மழையை அழைக்கின்றன.

பெய்த மழையின் வடுக்களாக முற்றம் நிறைய நீர் கட்டிவிட்டது. குமிழிகளுக்குக் குறைவில்லை.வானின் வளைந்த துண்டின் நிழலைச் சுமந்து கொண்டு ஒழுகி வருகின்றன. உருவத்தின் நிழல் படிந்தபோது, கதை விரிந்தது.

எப்படியோ துவங்கி எதையெல் லாமோ வளைத்து விரசமாகிமுடி யுமோவென்று நினைவு நடுங்குகிறது. ஆனுல் வேதநாயகத்தின் முடிவிற் காக இதைச் சொல்கிறேன் என்று நினைக்கும்போது எண்ணம் வளரு கிறது.

"முத்துக்கு நல்ல இடமாக ஒன்று அமையத்தான் செய்தது. அதற் கென்று தோட்டத்தில் பாதி விலை யாகி, சிறப்பாகச் சிலவு செய்து பெண்ணைக் கணவனேடு விடை கொடுத்து அனுப்பியபோது மாலையம் மாளுக்குச் சுமைவிட்டது. இனி தம்பியும், சிறுமி ராசுவும்தான் என்ற நிம்மதி ! பர்வதம் மட்டும் அந்த வீட் டின் மறந்து போன உயிராக உலவினுள் !"

"ஆவுடைக்குச் செல்லம், தனி மைக்குப் பேச்சானுள். வீட்டுத் தோட்டத்திலும்-மாடியில் உணவின் போதும், அவர்கள் மறைந்து மறைந்து, மறைத்து மறைத்துப் பேசிக்கொள்வதையெல்லாம், ராசு அத்தையிடம் ஒன்றுவிடாமல் பார்த் துச் சொல்லும் சாட்சியானுள்.

"ஒரு நாள் அந்த விபரீதம் வீக்கம் கொண்டுவிட்டது. மாலையம்மாளுக்கு தம்பிமேல் ஆத்திரம் வளர்ந்தது. குலத்திற்கு அடுக்காது செய்கிருனே. பெருமைக்குப் பொருந்தாத செயலில் ஈடுபடுகிருனே என்ற ஆத்திரம் ! தனது பெரிய உடம்பைக் குலுக்கி, முகம் சிவக்க வார்த்தைசிவக்கப் பேசிவிட்டாள் மாலையம்மாள்.

ஆவுடை மனசு எல்லை தாண்டி விட்டது. செல்லத்தைத் தவிர வேறெதுவுமே வேண்டாமென்று அவளையும் அழைத்துக் கொண்டு நின்ற நிலையில் புறப்பட்டுவிட்டான்.

"எல்லாமே சலனமற்றுப் போன நிலை. யாரும் யாருக்கும் தொடர்பற்ற வர்கள் போன்ற அனுதை நிலையில் ஆவுடை வாசலைத் தாண்டியபோது தான் வேதநாயகம் அந்தச் செய்தி யோடு உள்ளே வந்தார்.

முத்து இரண்டே நாள் காய்ச் சலில் போய்விட்டாள். செய்தியை இறைத்த வேதநாயகத்தின் துறவுக் கண்களிலும் உள்ளே எரிந்த தீயின் சிவப்பு படர்ந்திருந்தது.

ஆவுடையின் ஆதங்கம், அதிர்ச்சி யில் அமிழ்ந்து போயிற்று. பெண் ணின் வெற்று உடம்பு பிறந்த ஊருக்கே திரும்பி வந்தது. முன்ன வள் வெறும் உயிரோடு வந்தாள். பின்னவள் வெறும் உடம்போடு வந் தாள் ! சொந்தத் தோட்டத்தின் மூலை யில் அந்த வாழ்வு புதைபடுவதுவரை யில் வீட்டின் விவகாரங்களும் புதைந்து கிடந்தன.

வேதநாயகத்திற்கு இப்பொழுது தோட்டமே வீடாயிற்று. வீடு காடா யிற்று. வாழ்வு விழலாயிற்று ! மண் ணில் அழுத்தி வைத்த துயரத்தில் வீடும் நிலையும் மறந்து மோனத்தில், தவத்தில், விரக்தியில் கண்ணை மூடிக் கொண்டு உலவினுர்.

அந்தப் பெரு வெள்ளக் குமைவின் குதிப்பு அடங்கி, பின்னும் ஆவுடை-செல்லம் விவகாரம் தலை தூக்கிய போது செல்லம் நாலு மாதச் சுமை யுடன் நின்ருள் !

"தம்பி ! ஆவுடை இப்படி செய்து விட்டானேடா ? பெரியவனுன நீ இப்படியே மௌனம் சாதித்துவிட் டால் என்ன செய்வது ?" ஒரு நாள்

— 11-ம் பக்கம் —

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 5 ‖ 31—1—59 ‖ இதழ் 33

தமிழ் - ஆங்கிலம் - இந்தி

அமிழ்தினு மினிய தான
    அருந்தமிழ் மொழியி னூடும்
தமிழனே அறிஞ னாக்கித்
    தந்தஆங் கிலமும் நாட்டில்
அமைவுறப் படைத்த பேற்றை
    அழித்திடத் துணிவோர் தாமும்
'தமிழ'ரென் றுரைப்பா ராஞல்
    தமிழ்ப்பொருள் இழிவென் ருகும்.

ஆங்கிலங் கொடுத்த பேறே
    அரசிடை மக்கள் ஆட்சி!
ஆங்கில விளக்கின் கீழே
    ஆங்கில ஒலிபெ ருக்கி!
ஆங்கிலக் கடிகாரத் தோ(டு)
    ஆங்கில ஊர்தி கண்டும்
ஆங்கிலம் ஒழிப்பே னென்பான்
    அறிவிலா மடையன் என்பேன் !

தனக்கது தெரியா தாலே
    தலைச்சுமை அஃதென் கின்ருர்!
இனிப்பது வடநா டாளும்
    இந்தியென் கின்ருர்! தோழா!
எனக்கவர் இதயங் கூறும்
    இயல்மொழி தெரியும்! அன்னுர்
தனக்கொரு வடவர் வாழ்த்தைத்
    தான்விழை கின்ருர்; ஆமாம்!

ரஷ்யர்கள் ஆங்கி லத்தை
    நச்செனக் கருதல் கண்டே
சிஷ்யர்கள் அதுபோல் சொன்ஞர்
    சிரமுதற் பாதம் முற்றும்
ரஷ்யரின் தாளிற் போட்டு
    ராகமா லிகைகள் பாடும்
சிஷ்யரை இந்த நாட்டின்
    தெருப்புழு தியும்நம் பாதே!

ஒருபுறம் சிவஞா னத்தார்,
    உப்பிலாப் பண்டம் போலே!
மறுபுறம் சீவா னந்தர்
    'மாதசம் பள'த்தின் கீழே!
இருவரும் இழுத்து நிற்கும்
    இந்தியின் கதியை எண்ணி
ஒருமுறை அழுவோம்! அன்னுர்
    உருப்பட அழுவோம் வாராய்!

ஆங்கிலம் வாழு மாயின்
    அறிவுல கனைத்தும் வாழும்
பாங்குறும் தமிழும் ஆங்கே
    பண்புடன் செழிக்கும் ! எண்ணத்
தீங்குளார் புகுத்தும் இந்தி
    தீப்படும்! தமிழர் வாழ்வை
ஆங்கிலம் வளர்க்கும் போதே
    அன்னைஎந் தமிழும் வாழ்வாள் !

—கண்ணதாசன்

உங்களுடன்...

பொங்கல் மலரின் மணம்நுகர்ந்த தோழர்கள் தந்த பாராட்டுரைகள், தென்றலின் தொண்டு வளர்வதைக் காட்டுகின்றன. அவர்கட்கும் நன்றி.

★

"தென்றல்" நண்பர்களின் கருத்துரைகளுக்கு ஏற்ப, அவ்வப்போது தன்னால் ஆன தொண்டைச்செய்து வந்திருக்கிறது; வருகிறது. சராசரி அறிவுமில்லாத பொதுவுடைமையர் கிளப்பும் பல பிரச்னைகள் தனி மனிதனின் ஜீவ மரணப் போராட்டத்திற்கும் உலை வைப்பனவாக உள்ளன. அவற்றைக் கண்டித்து விளக்கி வரும் கூடலரசன் இந்த இதழ் முதல் பொதுவுடைமை பற்றியும் பொதுவுடைமையர்பற்றியும் எழும் ஐயங்களுக்கு விளக்கம் தருகிறார். இந்த "வினு-விடை"ப் பகுதி புதியது. உங்கட்கும் எங்கட்கும் இன்பம் தருவது.

★

மற்றொரு பகுதி அடுத்த இதழில் தொடங்குகிறது. வெண்பா விருத்தமாவதுதான் அது ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு வகை விருத்தப் பாடலின் அடி ஒன்றைத் தென்றலிலே அறிவிப்போம். அந்த அடியின் அளவொத்த மற்ற மூன்றடிகளையும் நிறைவு செய்து, அழகு தமிழ்க் கவிதை ஆக்கித் தர வேண்டியது உங்கள் கடமை.

★

பொங்கல் மலரில் இடமின்றி நின்று போனவை, "மழை"யும் "கவிஞ"னும், "சிங்கள இலக்கியங்களில் தமிழ்" என்பதும். அவையும் இந்த இதழில் இடம் பெற்றிருக்கின்றன. அடுத்த இதழில் "ரதி பிறந்த நாடு", "அவர் காணும் நாடு" என்ற இரு கட்டுரைகள் இடம் பெறும்.

★

போளூர் என்றதும் தோழர் சுப்பிரமணியம் அவர்கள் கட்டாயம் நினைவுக்கு வருவார். போளூரார் என்று நம்மால் அன்பாக அழைக்கப்படும் அவரது மூன்றுவது குமாரி தில்கவதி அவர்கள் நேற்று, சிறுவள்ளூர் எஸ். எம். கணேசன் அவர்களைக் கைப்பிடித்தார். மணையறம் ஏற்றிருக்கும் அந்த இளைய உள்ளங்களுக்குத் தென்றலின் வாழ்த்துக்கள். வாழ்க! வாழ்க!

அன்புள்ள,
ஆசிரியர்,

★

'புலித்தேவனு, கட்டபொம்மனு?'

தொடர்கட்டுரை
அடுத்த இதழில் வரும்.

சென்னைக் கல்லூரிகள் மாணவர் தமிழ் மன்றத்திற்கு

விசாலாட்சி ஆச்சி உலாவரும் வெண்பொற்கலம்

சென்னைக் கல்லூரிகள் மாணவர் தமிழ் மன்றத்தின் முத்தமிழ்ப் பெருவிழா சனவரி 21, 22 & 23 நாள்களில் நடைபெற்றது. விழாவில் திருவாளர்கள் வி. பி இராமன், பேராசிரியர் மீனாட்சிசுந்தரனார், கீ. இராமலிங்கனார், எம். பக்தவத்சலம், எம். எம் தண்டபாணி தேசிகர், ம. பொ. சிவஞானம், செட்டிநாட்டு அ முத்தையாச் செட்டியார், பெருமாள் முதலியார், ஆசிரியர் கண்ணதாசன் ஆகியோர் பங்கு கொண்டனர்.

நாடகப் போட்டி நடுவர்களாக திருவாளர்கள் தி. க சண்முகம், அரு இராமநாதன், எஸ். டி. சுந்தரம் ஆகியோர் இருந்தனர்.

நாடகவிழாவில் கலந்துரையாற்றிய ஆசிரியர் கண்ணதாசன் மறைந்த தம் அன்னையார் நினைவாக "விசாலாட்சி ஆச்சி உலா வரும் வெண்பொற்கலம்" ஒன்றை மன்றத்தினரிடம் அளித்தார். இக்கலம் ஆண்டுதோறும் கட்டுரைப் போட்டியில் வெல்லும் கல்லூரிக்கு வழங்கப் பெறும்.

மற்றும் இயல், இசை, நாடகம் மூன்று துறைகட்கும் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். மூன்று உலா வரும் வெண்பொற்கலங்களை அளித்தார்.

1. அறுசீர் விருத்தம்.

ஓர் அடி :

"சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே"

முடிவு தேதி: 7-2-'59.

தென்றல் விருத்தப் போட்டி : : சென்னை - 6.

- 12 -
கண்ணாத்தாள் மயக்கம்

கண்ணாத்தாள் மூர்ச்சையுற்று விழுந்தபோதும், வீரத்தேவனுக்குக் கலக்கம் ஏற்படவில்லை; உற்சாகமே பிறந்தது. செத்துப் போயிருப்பாளோ என்று சந்தேகிக்கப்பட்ட தங்கை, உயிரோடிருப்பதை அவன் கண்டுகொண்டுவிட்டான். ஆனால் சிங்கத்தேவன் நிலைமை அதுவல்ல. அவனை வாழவைத்துக்கொண்டிருந்த கண்ணாத்தாள், சாகடிக்கின்ற நிலைமையில் வந்திருக்கிறாள். ஊமைத்துரைக்கோ கண்ணாத்தாளைப் பற்றி எந்தவிதக் கலக்கமும் இல்லை. சென்னகேசவ நாயக்கன் வீட்டில், என்ன நாடகம் நடந்துகொண்டிருக்கிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புபவர்போல் அவர் காணப்பட்டார். வீரத்தேவன் தங்கையை அலாக்காகத் தூக்கி, உள்ளே இருந்த கட்டிலில் படுக்கவைத்தான். சிங்கத்தேவன் அறிமுகமில்லாதவன்போலவே ஒதுங்கிவிட்டான். சூழ்ந்துவந்து புரட்சி வீரர்கள், ஒருவரையொருவர் தள்ளிக்கொண்டு உள்ளே என்ன நடக்கிறது என்பதைக் காண விழைந்தனர். ஊமைத்துரை கடுமையான குரலில் சத்தம் போட்டு, அவர்களை வெளியிலே இருக்கவைத்தார்.

கண்ணாத்தாள் விழித்தால்தான் என்ன நடந்தது என்பதைப் புரிந்துகொள்ளமுடியும்! அவள் முகத்தில் தண்ணீர் தெளித்து விசிறினான் வீரத்தேவன். சென்னகேசவ நாயக்கன் எங்கே என்று தேடினார் ஊமைத்துரை. எங்கு தேடியும் அவனைக் காணவில்லை. 'இது யார் வீடு?' என்று அவரிடம் கேட்டான் வீரத்தேவன்.

'சென்னகேசவ நாயக்கர் வீடு. என் அண்ணாவுக்குப் பல சமயங்களில் கடன் உதவி செய்தவர்; பாஞ்சாலங்குறிச்சி வட்டகையில் மிகுந்த செல்வாக்குப் பெற்ற பணக்காரர் ஆமாம்... இவள் உன் தங்கை என்றால் இங்கே வரவேண்டிய அவசியமென்ன?' என்றார் ஊமைத்துரை.

'அதுதான் எனக்கும் புரியவில்லை. அயோக்கியர்களால் தூக்கி வரப்பட்ட என் தங்கைக்கு அடைக்கலம் கொடுத்தவராக இருக்கலாம்!' என்றான் வீரத்தேவன்.

கண்ணாத்தாள் இலேசாகக் கண் விழித்தாள். வீரத்தேவன் முகம் மலர்ந்தது. சிங்கத்தேவன் தலை சுழன்றுகொண்டிருந்தது. இரவோடு இரவாக ஊமையன் கோட்டையைக் கட்டி முடிப்பதற்குமுன், வீரத்தேவன், சிங்கத்தேவன் இருவரில் ஒருவரை ஊமைத்துரை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டதாக, சிங்கத்தேவன் கருதினான். கண்ணாத்தாளிடம் அவனுக்கு நம்பிக்கை இருந்தது. எக்காரணம் கொண்டும் தன்னை அவள் காட்டிக் கொடுக்கமாட்டாள் என்பதும் அவனுக்குத் தெரியும். இருந்தும், எங்கே அவள் ஏதாவது உளறி வைத்துவிடுவாளோ என்று அவன் பயந்தான். எதற்கும் தயாராக, கத்திப் பிடியிலே கையை வைத்துக்கொண்டே நின்றான்.

கண்ணாத்தாள் முழுக்கக் கண் விழித்தாள். ஆவலோடு 'கண்ணாத்தா' என்றான் வீரத்தேவன். 'அண்ணா' என்று கண்ணாத்தாளின் வாய் அழைத்தது. ஆனால் கண்கள் சிங்கத்தேவனைத் தேடிக்கொண்டிருந்தன. அவள் கண்களில் படாமல் சிங்கத்தேவன் மறைந்து நின்றுகொண்டான். வீரத்தேவனின் குடும்பப் பிரச்னையில் தலையிட விரும்பாதவர்போல், ஊமைத்துரை ஒரு மூலையில் போய் உட்கார்ந்து, சென்னகேசவ நாயக்கன் என்ன ஆகியிருப்பான் என்ற சிந்தனையில் ஆழ்ந்தார்.

வீரத்தேவன் கண்ணாத்தாளிடம், 'யாரடா உன்னைத் தூக்கி வந்தது? எப்படி இங்கே வந்தாய்?' என்று பரபரப்போடு கேட்டான். தம்பியோடு பிறக்காத வீரத்தேவன், தங்கையை 'அடா' என்று அழைத்து மகிழ்ச்சி கொள்வது வழக்கம். ஓரளவு தெளிந்திருந்த கண்ணாத்தாள் சமாளித்துக்கொண்டாள். கண்விழித்த உடனேயே, எங்கே அவர்?' என்று கேட்டுவிட இருந்தாள்; நல்ல வேளையாக அப்போது நா எழவில்லை. இப்போது முழுக்கச் சமாளித்துக்கொண்டுவிட்ட அவள், அண்ணனின் கேள்விக்கு அமைதியாகவே பதில் சொன்னாள். அவள் சொல்வதை மறைவில் நின்றபடி கூர்ந்து கேட்டுக்கொண்டிருந்தான் சிங்கத்தேவன்.

'இந்த வீட்டுக்காரன்தான் என்னைத் தூக்கிவந்துவிட்டான். யாருக்கும் தெரியாமல் இவ்வளவு நாள் என்னை மறைத்து வைத்திருந்தான். இப்போது நீங்களெல்லாம் வருகிறீர்கள் என்று கேள்விப்பட்டதும், கதவைப் பூட்டிக்கொண்டு ஓடிவிட்டான்' என்றாள் கண்ணாத்தாள்.

வீரத்தேவன் ஆத்திரமடைந்தான். சிங்கத்தேவன் பயந்தெளிந்தான். ஊமைத்துரை அதிர்ச்சியடைந்தார்.

'இந்த வீட்டுக்காரரா? சென்னகேசவ நாயக்கரா?... அம்மா! நன்றாக நிதானித்துக்கொண்டு சொல். நிச்சயமாக உன்னைத் தூக்கி வந்தவர் இவர்தானா?' என்று கேட்டார் ஊமைத்துரை.

சென்னகேசவ நாயக்கரை மிக உயர்ந்த மனிதர் என்றுதான் அவர் கருதியிருந்தார். கண்ணாத்தாள் சொல்வதை நம்பமுடியாமல்தான், அவர் அந்தக் கேள்வியைத் தொடுத்தார். ஆனால் கண்ணாத்தாள் அதை வேறு விதமாக எடுத்துக்கொண்டு பயந்தாள். ஒருவேளை தன்னைத் தூக்கிச் சென்றது சிங்கத்தேவன்தான் என்பது ஊமைத்துரைக்குத் தெரிந்திருக்கும்போலும்; அதனால்தான் இந்தக் கேள்வி கேட்கிறார் என்று எண்ணிவிட்டாள். இருந்தாலும், நின்ற இடத்திலேயே நின்றால் பொய்யும் உண்மையாகிவிடும் என்ற துணிவில், 'இவரேதான் என்னைத் தூக்கி வந்தார்; இவ்வளவு காலமும் பருத்திக் காட்டுக் குடிசையில் மறைத்து வைத்திருந்தார். தன்னைக் கல்யாணம் செய்துகொள்ளும்படி என்னை வற்புறுத்தினார். இவ்வளவு காலமும் நான் மறுத்துக்கொண்டு சமாளித்து வந்தேன். நேற்று இரவு என்னை மூடப்பட்ட வண்டியில் இங்கே அழைத்து வந்தார். பலவந்தமாகவாவது கெடுத்துவிடுவது என்று முடிவுக்கு வந்தார். நான் எதிர்த்துப் போராடினேன். குத்துவிளக்கால் சாடினேன். நீங்கள் வருகிற ஆரவாரம் கேட்டது. அதனால்தான் அவர் வெளியிலே பூட்டிக்கொண்டு சென்றுவிட்டார்' என்றாள் கண்ணாத்தாள்.

வீரத்தேவன் தங்கையின் தலையைக் கோதிக் கொடுத்தான். மானத்துக்காகப் போராடியிருக்கிறாள் தன் தங்கை. கற்புக் கெடாமல் வாழ்ந்திருக்கிறாள். அவள் கன்னிதான் என்று எண்ணிப் பெருமைகொண்டான். மறைவில் நின்ற சிங்கத்தேவன் தனக்குள்ளாகவே சிரித்துக்கொண்டான். ஊமைத்துரை முன்னும் பின்னுமாக நடக்க ஆரம்பித்தார். கண்ணாத்தாளின் வார்த்தைகளிலே அவருக்கு நம்பிக்கை பிறந்தது. 'சென்னகேசவன் அயோக்கியனா? காமுகனா? கம்பளத்தாரும் மறவர்களும் பெண்களைத் தெய்வங்களாகக் கருதுபவர்களாயிற்றே! அவனைச் சும்மா விடக்கூடாது. இனி அவன் சொத்துகளையெல்லாம் கைப்பற்றிக் கொள்ள வேண்டும். அவனைக் கண்ட துண்டமாக்கிப் போட வேண்டும்' என்றெல்லாம் எண்ணியபடி உலாத்தினார் அவர். வீரத்தேவன் கொஞ்ச நேரம் அவர் முகத்தைப் பார்த்தான்.

சென்னகேசவ நாயக்கன், பொம்மு நாயக்கருக்கு எவ்வளவு உதவியிருக்கிறான் என்பது அவனுக்கும் தெரியும். அதனால்தான் கடுமொழியாலே அவன் பெயரைக் குளிப்பாட்டாமல், ஊமைத்துரையின் முகத்தைப் பார்த்தான். ஊமைத்துரை தெளிவோடும் அழுத்தமாகவும், 'சென்னகேசவனை எப்போது கண்டாலும் கொன்று முடிப்பேன்' என்றார். கண்ணாத்தாள் சொன்னதிலே பின்பாதி உண்மைதானே! முன்பாதி பொய்யானாலும் அது வள்ளுவன் சொற்படி வாய்மைதானே! பொய் அவள் கணவனைக் காப்பாற்றியது; உண்மை ஒரு காமுகனைக் கொல்லப்போகிறது! கண்ணாத்தாள் அமைதியுற்றவள்

போல் காணப்பட்டாள். வீரத்தேவன் கண்களிலே கண்ணீர் பெருக்கெடுத்தது. இத்தனை மாத காலமும் தினசரி போராடிக்கொண்டுதானே இருந்திருப்பாள் தங்கை; கடைசிவரை கற்பழியாமல் இருந்திருக்கிறாள் என்றால், அதற்காக எவ்வளவு பாடுபட்டிருப்பாள்! காமுகன் ஒவ்வொரு இரவிலும் நெருங்கியிருப்பான். அழுதோ, அலறியோ, ஆத்திரங்கொண்டோ அவனைத் துரத்தியிருப்பாள். எத்தனை நாட்கள் சாப்பிடாமல் கிடந்தாளோ!—வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டான் வீரத்தேவன்.

'இப்போது பொய் சொல்லியாகிவிட்டது. இனி எப்படி நடந்துகொள்வது? எந்த வகையில் தன் இரகசியத்தை மறைப்பது?' என்னும் எண்ணங்களில் ஆழ்ந்தாள் கண்ணாத்தாள். அளவுக்குமீறிய தந்திரம் தெரிந்திருந்தாலொழிய, கணவனுக்கு முன்னால் அறிமுகமில்லாதவள்போல நடந்துகொள்ள அவளால் முடியாது. இது ஒரு பெரிய பிரச்னை. ஒருபுறம் அண்ணன்; மறுபுறம் கணவன். இருவரும் பக்கம் பக்கமாகவே இருப்பார்கள். அந்த இருவரின் அருகிலேயே அவளும் இருக்க வேண்டும். கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டாலும் குமுறும் எரிமலை வெடித்துவிடும்! அண்ணனைக் கண்ட ஆனந்தத்தைவிட, அடுத்து நடந்துகொள்ள வேண்டிய முறையே அவளைப் பெரிதும் இழுத்தது.

சிங்கத்தேவன் மனதை இப்போது சிறிய சந்தேகம் ஒன்று கவ்விற்று. சென்னகேசவன் வீட்டுக்குக் கண்ணாத்தாள் வர வேண்டிய அவசியம் என்ன? ஊமைத்துரை குழுவினருக்கிடையில் தான் இருக்கும்போது தன்னைத் தேடி வருவது ஆபத்து என்று கண்ணாத்தாளுக்குத் தெரியாதா? வீரத்தேவனும் அருகிலேயே இருப்பான் என்பதை மறந்திருக்கமுடியுமா? தன்னைக் காட்டிக் கொடுக்கும் எண்ணம் அவளுக்கு இல்லை என்பது இப்போது வெளியாகிவிட்டது. இருந்தாலும், எப்படி அவள் நேர்வழியைவிட்டு இந்தக் கிராமத்துக்குள் நுழைந்தாள்? உண்மையிலேயே சென்னகேசவனிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டிருப்பாளா?—இப்படியெல்லாம் பொருளற்ற முறையில் அவன் சிந்தனை சந்தேகத்தோடு புறப்பட்டது. விவரத்தைத் தனியாகக் கண்ணாத்தாளிடம் கேட்டுவிடுவது என்று தீர்மானித்தான். பாஞ்சாலங்குறிச்சிக்குச் சென்றதும், எப்படியாவது கண்ணாத்தாளைத் தனியாகச் சந்தித்து விடுவது என்று முடிவுகட்டினான். வீரத்தேவன் கட்டிலைச் சுவரோரமாகத் தள்ளி, கண்ணாத்தாளை அதிலே நிமிர்த்தி உட்கார வைத்தான். ஊமைத்துரை வெளிப்புறத்துத் திண்ணையிலே வந்து அமர்ந்துகொண்டார். கண்ணாத்தாள் இன்னும் தெளிவுற்றதும் எல்லோரும் பாஞ்சாலங்குறிச்சிக்குப் போய்விடலாம் என அவர் எண்ணிக்கொண்டிருந்தார். சென்னகேசவனைத் தேடிக்கொண்டிருப்பதற்கு இது நேரமில்லையல்லவா!

'ஏதாவது சாப்பிடுகிறாயா?' என்று கண்ணாத்தாளைக் கேட்டான் வீரத்தேவன்.

'இல்லை; பசி இல்லை. இரக்கமாக இருக்கிறது. மயக்கம் வரும் போல் தோன்றுகிறது. அம்மா... அப்பா...' என்று முனக ஆரம்பித்தாள் கண்ணாத்தாள்.

திடீரென்று என்ன வந்தது? வீரத்தேவன் பயந்துபோனான். ஊமைத்துரை உள்ளே ஓடி வந்தார். கண்ணாத்தாள் 'குபுக்' கென்று வாந்தி எடுத்துவிட்டாள்.

'வைத்தியரை அழைத்துவாருங்கள்; வைத்தியரை அழைத்து வாருங்கள்' என்று சத்தம் கொடுத்தார் ஊமைத்துரை.

பாஞ்சாலங்குறிச்சி வீரனொருவன், பக்கத்திலிருந்த வைத்தியர் வீட்டுக்கு ஓடி, தூங்கி வழிந்துகொண்டிருந்த அவரை தூக்கக் கலக்கத்தோடு அழைத்து வந்தான். வைத்தியர் கண்ணாத்தாளின் கையைப் பிடித்துப் பார்த்தார். இப்போது கட்டிலில் சாய்ந்து கண்களை மூடியபடி கிடந்தாள் கண்ணாத்தாள்.

'என்னைய்யா, என்ன...... என்ன?' என்று பதறினான் வீரத்தேவன்.

'இதில் பயப்படறதுக்குஎன்ன இருக்கு. இயற்கையா வர்ற வாந்திதான்' என்றார் வைத்தியர்.

'அப்படியென்றால்...?'

'பொண்ணு மூனு மாச கர்ப்பம்' என்று முத்திரை வைத்த வைத்தியர், மருந்துப் பெட்டியை மூடலானார்.

வீரத்தேவன் தன்னை மறந்து 'அம்மா!' என்று அலறியபடி எழுந்து நின்றான். ஊமைத்துரை ஒருபுறம் ஒதுங்கி நின்றுகொண்டார். சிங்கத்தேவன் மீண்டும் சிக்கலில் ஆழ்ந்தான்.

தொடரும்

கண்ணதாசன் கவிதைகள்-வெளியீட்டு விழா

1-௨-'௫௯ ஞாயிறு மாலை 5-மணிக்கு

சென்னை-வண்ணை, தியாகராயர் கல்லூரி அரங்கில் நிகழும்.

தலைவர்: பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார், எம். ஏ., எல். டி. அவர்கள்

வெளியிடுபவர்: **அறிஞர் அண்ணா** அவர்கள்

உரை நிகழ்த்துவோர்

நாவலர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.
கலைஞர் மு. கருணாநிதி எம். எல். ஏ.
வழக்கறிஞர் வி. பி. இராமன் பி. எஸ்சி., பி. எல்.
இராம. அரங்கண்ணல்
இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன்
நடிகமணி டி. வி. நாராயணசாமி
க. அறிவழகன் எம். ஏ.
முரு. சேதுராமன்

திராவிட மொழிநூலார் ஞா. தேவநேயப் பாவாணர் எம். ஏ.
புலவர் மயிலை. சிவமுத்து
,, மெ. சுந்தரம் எம். ஏ., எம். ஓ. எல்., எம். லிட்.
,, தணிகை உலகநாதன்
,, கோ. வில்வபதி
,, அன்பு கணபதி
கவிஞர் கம்பதாசன்
அரு. இராமநாதன்

விழாத்தொடக்கத்தில் கண்ணதாசன் அவர்களின் பாடல்களை முத்தமிழ்க் கலையரசு திரு. டி. ஆர். மகாலிங்கம், திரு. ஏ. எம். இராஜா, திருமதி ஜமுனாராணி, திருமதி டி. எஸ். பகவதி முதலியோர் பாடுவர், இசைஅமைப்பாளர்கள் திருவாளர்கள் விசுவநாதன்-இராமமூர்த்தி குழுவினர் இன்னிசையுடன்.

அனைவரும் வருக!

விழா அரங்கில் "கண்ணதாசன் கவிதைகள்" விற்பனைக்குக் கிடைக்கும். விலை ரூ. 2-50.

வெளியிடுவோர்: **காவியக் கழகம்,** 43, கலவச்செட்டி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

சிங்கள இலக்கியங்களில் தமிழ்

யான் பிறப்பிலே சிங்களவராக இருந்தாலும், எனக்குத் தமிழ் மொழியின்பால் ஒரு தனிப்பற்று என்றுமே உண்டு.

தமிழரும், சிங்களவரும், அதிகமாக ஒற்றுமையுடனே ஒன்றுபட்டு வாழ்ந்திருக்கின்றனர் என்பது இலங்கை இதிகாசங்களான "மகாவம்சம்" முதலியவற்றில் காணப்படுகின்றது. பல பழைய சிங்கள இலக்கியங்களை நான் ஆராய்ந்தபோது, பல உண்மை நிலைகள் காணப்பட்டன. அவற்றையெல்லாம் ஒரு சிராகத் தொகுத்து, கீழே எழுதியிருக்கிறேன். இலங்கை அக்காலத்தில் மூன்று பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. அவை **மாயா ரட்டை, மலய ரட்டை, ருகுன ரட்டை** என்பவைகள். மாயரட்டை பகுதியில் உள்ள, **வன்னிய** என்ற ஊரில் **விஜயமல்ல** என்பவர் வசித்து வந்தார். அவருடைய மகன்தான் **விஜயபாகு** என்பவன். இவன் நல்ல பலசாலி, இவன் முகத்தில் ராஜகளை வடிந்தது. விஜயபாகு தனது ஊரிலுள்ள பெரிய அதிகாரிகளை, அந்தஸ்தில் உயர்ந்தவர்களை, தனது பேச்சின் மூலமும், அவர்கள் இட்ட வேலைகளை நொடி பொழுதில் செய்து முடிக்கும் மூலமும், கவனத்தைக் கவர்ந்தான், பிறகு மெல்ல, மெல்ல, தன் பக்கம் இழுத்து தனது உடல் வலிமையால், அவர்களை அடிபணியச் செய்தான். அவர்களும் தங்களுக்கு இப்படிப்பட்ட ஒரு தைரியசாலி தேவைதான் என்று அக்கால சூழ்நிலைகளின்படி ஏற்றுக்கொண்டனர். நாளாக, ஆக, விஜயபாகு, தான் அவர்களுக்கெல்லாம் பெரிய தலைவனாக விளங்கினான். அதன்பின் அரசனாக **தம்பதெனி புரய** என்ற இடத்தில் தன் அரசை அமைத்துக்கொண்டு மாயாரட்டை முழுவதும் அரசாண்டான்: இது நடந்தது **கி. மு. 1220** வருடங்களுக்கு முன் என ஆராய்ச்சியாளர்கள் கணக்கெடுத்திருக்கின்றனர். தம்பதெனி புரய, மாயாரட்டைக்கு தலை நகராக விளங்கியது. இங்கிருந்துதான் "தம்பதெனி புரய" ஊரின் அரசாட்சி துவங்குகிறது. இப்படியாக இது நடக்கும்பொழுது இடையே "வன்னிய" என்ற ஊரின் மக்கள் விஜயபாகு தங்களுக்கு அரசனாவதை எதிர்த்தனர். தான் பிறந்த ஊரே தனக்கு எதிராக வரும் என்று விஜயபாகு கனவிலும் கருதவில்லை. ஆனால் விஜயபாகுவின் அதிர்ஷ்டந்தான், தம்பதெனி புரய அடுத்துள்ள **வாகிரிகல** என்ற ஊரின் மக்கள் விஜயபாகு மாயாரட்டை முழுவதும் அரசனாவதை மனப்பூர்வமாய் ஒரு முகத்துடன் வரவேற்றனர் அரசனாகாமல் எதிர்த்த வன்னிய மக்களை "வாகிரிகல" மக்கள் தடுத்து அவர்களை அடக்கினர். அக்காலத்தில் வாகிரிகல மக்கள் **"மாயாதுன்ன"** என்ற புகழ்பெற்ற பெயரால் அழைக்கப்பட்டனர். அவர்கள் வீரத்திற்குப் பெயர் பெற்றவர்கள். நல்ல உடல் வலிமை வாய்ந்தவர்கள். இதனால் வன்னிய மக்கள், வாகிரிகல மக்களுக்கு அடிபணிந்ததில் ஆச்சரியமில்லை. வன்னிய மக்கள் விஜயபாகுவின் ஆட்சிக்கு கிழ்க் கொண்டு வரப்பட்டனர். இந்தச் சமயத்தில் மலயரட்டை, ருகுனுரட்டை, முதலிய பகுதிகளில் உள்ள மக்கள் ஒவ்வொரு இடத்தில், கோட்டைகள் கட்டி, அரண்கள் அமைத்து, ஒவ்வொரு பாளையங்களாகப் பிரிந்தன. தென்னகத்திலுள்ள கேரள-தமிழ் அரசர்களும், இப்பாளையங்களுக்கு வேண்டிய உதவிகள் அளித்துச் சிறப்புற மக்கள் வாழ வழி வகைகளை செய்தனர். இதே நேரத்தில் மாயாரட்டை பகுதிக்குள்ள வன்னிய மக்களும், விஜயபாகு அரசனுக்கு கட்டுப்பட்டு, ஒரு சண்டை சச்சரவில்லாமல், சந்தோஷமாக வாழ்ந்து வந்தனர். இனித்தான் நாம் கட்டுரையின் முக்கிய இடத்திற்கு வர வேண்டியவர்களாகிறோம்.

மாயாரட்டை முழுவதும் அரசனாக இருந்த விஜயபாகு வன்னிய ஊரில் வசித்தாலும், அவனது தந்தையான விஜயமல்ல என்பவரின் பூர்வகுடிகள், பரம்பரைகள் உற்பத்தியானது தென்னகத்திலுள்ள கலிங்க தேசத்தில்தான். கலிங்க நாட்டில் வசிக்கும் மக்களுக்கு **மலலயோ** என்ற ஒரு பெயரும் உண்டு. இதனால் கலிங்க நாட்டுப் பரம்பரையில் வந்த விஜயபாகுக்கு **"கலிங்க விஜயபாகு"** என்ற டரம்பரை பெயரும் உண்டாயிற்று. இக்தவிதமாக நாம் நன்றாக ஆராய்ந்து பார்க்கும்பொழுது, இவர்களும் தமிழர்கள்தான் என்பது நன்கு புலனாகின்றது. அப்படியானால் விஜயபாகு அரசாண்ட மாயாரட்டையில் சிங்களவராக மாறின தமிழரும் இருந்தார்கள் என்பது வெள்ளிடைமலை. இத்தமிழர்களுடன் மணம் முடித்து, வாழ்ந்த சிங்களவர்களும் அநேகர் இருந்தனர். இப்படியாகத் தமிழர், சிங்களவர் உறவு அங்கே ஒன்றுபட்டு ஐக்யமாய் வாழ்ந்து வந்தது. நாளடைவில் இவர்கள் பேசிய மொழியும் தமிழும் சிங்களமும், கலந்ததாக இருந்தது. தமிழர்களின் உறவினால் சிங்கள மொழியில் தமிழும் இரண்டறக் கலந்தது. பேசும் மொழியில் தமிழ் கலந்ததனால், எழுதும் வாக்கியங்களில் சாஸ்கிருதம் கலந்தது. இதனால் வித்தியாசம் ஏற்பட்டது. பேசும் மொழியை அறிந்த மாயாரட்டை மக்களுக்கு எழுதும் சிங்கள, சமஸ்கிருதம் கலந்த மொழியை அவ்வளவாக அறியவில்லை. இதற்கிடையில் மாயாரட்டை இருந்த புத்தபிட்சுகளும், அவ்வளவு படித்தவர்கள் அல்லர் ஆனாலும் மாயாரட்டை பகுதிக்குள்ளிட்ட ஊர்களில் உள்ள குழந்தைகளுக்கு ஆரம்பக்கல்வி போதிப்பது இந்தப் பிட்சுகளுக்குத்தான் கிடைத்தது. இப்படியிருக்கும் பொழுது மலயரட்டை, ருகுனுரட்டை, பகுதிகள் மாயாரட்டையோடு அதிக துவேஷம் கொண்டிருந்தன. மூன்று நாடுகளும் ஒன்றையொன்று எதிர்த்த வண்ணம் இருந்தன. அன்னிய நாட்டு ஆதிக்கக்காரர்கள் அதாவது மலயரட்டை, ருகுணுரட்டையைச் சேர்ந்தவர்கள், மாயாரட்டையில் உள்ள பழைய ஏட்டுச்சுவடிகளை எரித்தனர். இவர்கள் இப்படி ஏடுகளை நாசப்படுத்துவதைக் கண்ட, மாயாரட்டை புத்தபிட்சுகளும், வெளிநாடு சென்றிருந்த புத்தபிட்சுகளும், ஏட்டில் உள்ள விஷயங்களை நன்றாக வாய்ப்பாடம் செய்தனர். இதனால் மாயாரட்டைப் பதிக்குள், அதாவது விஜயபாகு ஆட்சிக்கு உட்பட்டிருந்த பகுதிக்குள் மாத்திரம் புத்தபிட்சுகள் மக்களுக்கு வாய்ப்பாடமாகக் கல்வி போதித்தனர். தனது நாட்டிலுள்ள பிரஜைகளுக்கு கொஞ்சமேயாயினும் கல்வி கற்றுக் கொடுப்பதற்கு விஜயபாகு அதிக முயற்சிகளில் ஈடுபட்டான். அவன் தனது பிரஜைகளைப் பெரிய அறிஞர்களாகவோ, பண்டிதர்களாகவோ, ஆக்க நினைக்கவிலலை. ஏதோ அவர்கள் எழுத, படிக்க தெரிந்தால் போதும், என்ற நினைப்புடன் விஜயபாகு, **துதுலுபியஸ** என்ற ஊர் உள்ள இன்னும் கொஞ்சம் படித்த புத்தபிட்சுகளை, வரவழைத்து, தன் மக்கள் கல்வி பெற வழி வகைகள் செய்தான். இப்படிச் செய்தும், கல்வி போதிக்கும் குருமார்கள் பற்றாக் காரணத்தாலும், கல்வி கற்க வேண்டிய கருவிகளான, ஏடுகள் எழுத்தாணிகள், குறைவினாலும், தென்னகத்திலுள்ள சோழ அரசாட்சியிலிருந்து, கல்வி, கற்ற புத்தபிட்சுகளும், ஏடுகள், சுவடிகள், எழுத்தாணிகள் முதலியவைகளையும் வரவழைத்தான்; சோழர்களும் விஜயபாகுவின் வேண்டுகோளுக்கிணங்க, அவன் விரும்பியவைகளை அனுப்பிவைத்தார்கள். இப்படியாகத் தமிழகத்திலிருந்து வந்த புத்தபிட்சுகள் தமிழும், சமஸ்கிருதமும், கற்றிருந்தனரே தவிர, சிங்களம் அறவே இவர்களுக்குத் தெரியாது. முன்பு இங்கேயிருந்து தமிழகத்திற்கு சென்றிருந்த புத்தபிட்சுகளும், மறுபடியும் ஈழத்துக்கு திரும்பி வந்தனர் இவர்கள் தமிழ் மொழியை நன்றாகக் கற்றிருந்தனர். இதனால் இவர்களுடைய சிங்கள மொழியில் தமிழ்மொழியும் கலந்திருந்தது. மொழி இவ்வாறாகக் கலப்படம் ஆனாலும் புத்தமதம் மட்டும் இந்தியாவுக்கும், இலங்கைக்கும், ஒரு வித்தியாசமில்லாமல் ஒரே சிராக இருந்தது. இந்தச் சமயத்தில் மொழியைவிட மக்களுக்கு மதம்தான் முக்கியமாகப் பட்டது. இதனால் விஜயபாகு தன் இரண்டு புதல்வர்களுக்கும், மொழியைவிட, மதத்தைப் பற்றிய போதனைகளை விசேடமாக கற்பித்தான். இனி அரசன் விஜயபாகுவின் விருப்பப்படி மாயாரட்டை ராஜ்யம் முழுவதும், இன்னும் ஏராளமான ஏடுகளும், எழுத்தாணிகளும் வாங்கி கல்வி வளர வழிகள் செய்யப்பட்டது. இதன் பின்னால் கல்வியில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டது. இன்னும் கொஞ்ச நாள் சென்றதும், மாயாரட்டையில் ஆங்காங்கு உள்ள இடங்களில், கல்வி போதிக்க ஆசிரமங்கள் அமைக்க விஜயபாகு முயற்சி எடுத்தான். இதனால் தமிழர்களின் உறவும் முயற்சியும், வளர்பிறை போல் வளர்ந்தது. நாளடைவில் பேச்சு மொழியிலிருந்த தமிழும் எழுது மொழியிலிருந்த சமஸ்கிருதமும், எழுது மொழியில் சிங்களத்துடன் கலந்தது.

தமிழ்ச்சொற்கள் எத்தனையோ சிங்களத்துடன் கலந்துள்ளதை இன்றும் சிங்களவர்கள், சிங்கள மொழியைப் பேசும்போது காணலாம். உதாரணமாக :-அக்காலத்திலிருந்த தம்மபதத்தைப் போதிக்கும் **"சத்தர்ம ரத்னவளி"** என்னும் பழைய ஏட்டுச்சுவடியில் வரும் தமிழ்ச்சொற்கள் பின்வருமாறு : **முசிப்பு, முற்று, சும்மாடி, முதலி, அடுக்கு, புறமட்டு, அட்டாலை, உருட்டு** முதலியவைகளாகும். இன்னும் எந்த விதமான ஏடுகளில் ஆடை, அணிகள், சங்கிதக் கருவிகள், எழுதும்போதும் தமிழ்மொழியுடன் சம்பந்தப்பட்ட இவ்வாக்கியங்கள் போடாமல் எழுத முடியாத அளவுக்கு வந்துவிட்டார்கள் அக்காலத்திய ஆசிரியர்கள். உதாரணமாக ஆபரணங்களுக்கு, **'சவடி,' 'கொண்டமால்,' 'கைவடம்,' 'கைப்பொட்டு'** என்றும், ஆடைகளுக்கு **'சட்ட,' 'ஓசரி,' 'வக்காரி'** என்றும், சங்கிதக் கருவிகளுக்கு **'தலப்பற,' 'அனுகத்தாலி,' 'தப்பு,' 'டக்கி,' 'உடக்கி,'** என்றும் **'தூபாவன்ச,'** என்ற ஏடுகளிலும் காணப்படும். இதனால் நாம் கடைசியாகத் தெரிந்துகொள்வது என்னவெனில் தமிழர்களின் உறவினாலும், தமிழ்மொழியின் தரத்தினாலும், சிங்கள கலாச்சாரம், நல்ல, நன்மைகளை அடைந்திருக்கிறது. இன்னும் சிங்கள மொழி வளரவும், தமிழ்மொழி வழிவகுத்திருக்கிறது. இன்னும் பல்லாண்டு காலம் தமிழர், சிங்களவர் உறவு நீடித்து வளரவுமாக.

—சிங்களக் கவிஞர்
"நேணருவன்" டி. எஸ். எல்,

தோழர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க, தென்றல் 1958 பொங்கல் மலரில் வெளியான **அண்ணா** அவர்களின் படமும், 1959 பொங்கல் மலரில் வெளியான **எம். ஜி. ஆர்., எஸ். எஸ். ஆர்., கண்ணதாசன்** ஆகியோர் இணைந்த படமும் தனித்தனியே அச்சிடப்பட்டுள்ளன. வேண்டும் தோழர்கள் அஞ்சல் செலவு உள்படக் கீழ்க்கண்டபடி அஞ்சல் தலைகள் அனுப்பிப் பெற்றுக்கொள்க :

அண்ணா படம் ... **31 புதிய காசுகள்**

எம். ஜி. ஆர்.
எஸ். எஸ். ஆர். } **31 புதிய காசுகள்**
கண்ணதாசன்

விற்பனையாளர்கள், தேவையானவற்றிற்குக் கழிவு 6 காசுகள் நீக்கி பிரதி ஒன்றுக்கு 25 காசு வீதம் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்க.

பொறுப்பாளர்,
"தென்றல்"



கீழச்சிவல்பட்டி—அழகாபுரித் தமிழ் மன்றத்தினர் சனவரி 17, 18, 19 தேதிகளில் தமிழர் திருநாளைச் சிறப்புறக் கொண்டாடினர். நாவலர் திரு. நெடுஞ்செழியன், திரு. ம. பொ. சிவஞானம், டாக்டர் திரு. மா. இராச மாணிக்கம், திரு. கண்ணதாசன் ஆகியோர் பங்குகொண்டனர். மேலே இருப்பது ஆசிரியர் தலைமையில் நடந்த கவியரங்கக் காட்சியாகும்.

படம் :—திரு. கரு. இலக்குமணன்.

— 3-ம் பக்கத் தொடர்ச்சி —

இரத்தினச் சுருக்கமாகக் கீழ்வரும் குறட்பாவில் கூறியிருப்பது காண்க:

**"ஏரினும் நன்றால்
எருவிடுதல்; கட்டபின்
நீரினும் நன்று அதன் காப்பு"**

கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தியுள்ள இந்த அற்புதமான கருத்துச் செறிவுள்ள குறளில் பயிர்த் தொழில் முறையை மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் பயிர் வளர்ச்சித் திட்டத்திற்கு, உணவு உற்பத்தித் திட்டத்திற்குத்தக்க வழியாக மேற்கொள்ளுமாறு கூறியுள்ளார் வள்ளுவர்.

குடிமக்கள் பண்பு

வள்ளுவர் குடிகள் எப்படியிருக்க வேண்டுமென்று அறிவுறுத்தாமல் இல்லை. குடிமக்கள் பண்புடையவர்களாய் இருந்தாற்றான் நாடு அமைதியாகப் பகையின்றி, படையெடுப்பும் இன்றி வளமாக இருப்பதோடு பிறநாடுபோற்றும்சிறப்புமுற்றிருக்க முடியும். ஆதலால், குடிமக்கள் கயமைத் தன்மையில்லாதவர்களாய் உண்மை அன்பு, அருள், ஒழுக்கம், தீய செயலில் நாணம், மான உணர்ச்சி, வறுமையில் உயர்வு, செல்வத்தில் பணிவு, முயற்சி இவற்றையுடையவர்களாய்ப் பண்பாடு மிக்கவர்களாய் வாழ வேண்டும் என்று திருக்குறள் வற்புறுத்துகிறது; செல்வர்கள் தங்கள் செல்வத்தைப் பிறருக்குப் பயன்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்துகிறது; அங்ஙனம் செய்யாவிட்டால்

**"நச்சப் படாதவன்
செல்வம் நடுவூரில்
நச்சு மரம்பழுத் தற்று"**

என்றும் எச்சரிக்கையும் செய்கிறது.

தொகுத்துச் சொன்னால், அரசு வரலாற்று முறையில் தோன்றியிருக்க வேண்டும் என்றும், குறிப்பிட்ட எல்லைக்குள் அடங்கிய நிலப்பரப்பும் குடிமக்களும் ஆட்சியமைப்பும் அதிகார முழுவுரிமையும் ஆகிய நான்கும் உடையதே அரசு என்றும், மக்கள் நல வாழ்வே அரசின் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்றும், திருக்குறள் கூறுவது முடியரசே என்றும், அரசின் உறுப்புக்கள் நாடு அரசன், அமைச்சு, அரண், படை, பொருள் நேச நாட்டு நட்பு ஆகிய ஏழும் என்றும், வளமுள்ளதும் நோய் கொடியற்றதும் சான்றோர்கள் வாழ்வதுமாக உள்ள நிலப்பரப்பே நாடாகும் என்றும், அரசன், கல்வி அறிவு, அறவொழுக்கம், அறிவுரையையேற்கும் பொறுமைப் பண்பு இவற்றை உடையவனாக இருக்க வேண்டும் என்றும், அமைச்சன் அறவழியிலிருந்து நீங்காமல்திறமை மிக்கவனாய்ப் -பொறுப்புள்ளவனாய் இருக்க வேண்டும் என்றும், அரண் பாதுகாவல் மிக்கதாக இருக்க வேண்டும் என்றும், புதையல் பொருளும் சுங்கமும் திறைப் பொருளும் நிலவரியும் அரசாங்க வருவாய் என்றும், அரசன் ஆய்ந்தாய்ந்து நேச மன்னர்களைப் படைத்துணை நட்பாகக் கொள்ள வேண்டும் என்றும், திருவள்ளுவர் மறைத்துறை (C. I. D.), தூது இவற்றை இன்றியமையாத் துறைகளாகக்கூறுகிறார் என்றும், மக்கள் நலவாழ்வே உள்நாட்டுக் கொள்கையாகவும் பகையின்றி நாடு பிடிக்கும் ஆசையின்மையை வெளிநாட்டுக் கொள்கையாகவும் திருக்குறள் கருதுகிறது என்றும், அரசானது மதுவிலக்கு, பரத்தையொழிப்பு, சூதாட்ட ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, இரத்தல் ஒழிப்பு, இவற்றை மேற்கொள்ள வேண்டும் என்றும், திருக்குறள் நோய்த் தடுப்புத் திட்டத்தையும் உணவு உற்பத்தித் திட்டத்தையும் கூறுகிறது என்றும், இறுதியாக அரசின் அடிக்கீழ் வாழும் குடிமக்கள் கயவர்களாக இல்லாமல் முயற்சி மிக்கவர்களாய்ச் சான்றோர்களாய், பண்பாடு உள்ளவர்களாய் வாழ்ந்து அரசுக்குப் பெருமை தேடித் தர வேண்டும் என்றும், அரசனும் அமைச்சனும் தூதனும் வீரனும் அற மனப்பான்மையோடு அருளுள்ளம் படைத்தவர்களாய்த் திகழ வேண்டும் என்றும், அற நெறி முதற்றே அரசியல் தானும் என்றும் அறிக. திருக்குறள் காட்டும் அரசியற் கருத்து அறவழி நிற்கும் அரசேயாகும். வாழ்க வள்ளுவர் காட்டும் அடிப்படை அரசியல் நெறி, வழி வழி!

முற்றும்.

★ கவிஞன் ★

கவிஞன் :

அவன் ஓர் இணைப்புப் பாலம். நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் இணைக்கும் ஓர் மாயாவி; அறிவுப்பசி கொண்டவர்களின் தாகத்தைத் தணிக்கும் ஓர் தெள்ளிய நீரோடை.

கவிஞன் :

அழகு நதியின் கரையிலே வளர்ந்துள்ள ஓர் விருட்சம்; இதயப் பசி கொண்டவர்களுக்கு கவிதைக் கனி தரும் கற்பகத் தரு

கவிஞன் :

பாடித் திரியும் ஓர் வானம்பாடி; வார்த்தை ஜாலத்திலே தத்தித் திரியும் ஓர் சுதந்திரப் பறவை, மென்மையும், இனிமையும் ஒன்றாகக் குழைத்து, கவிதையாக, நெஞ்சம்கவரும் கானமாகத் தரும் சிற்பி.

கவிஞன் :

அந்தி வானத்திலே பறந்து திரியும் முகிற் கூட்டம்; வானகம் வியக்க, வையகம் சிரிக்க, வாழ்க்கை என்னும் மலர்ச்சோலையை மலர வைக்கும் பருவ மழை.

கவிஞன் :

ஒளி சிந்தும் முழு நிலவு; வழி காட்டும் ஒளி விளக்கு; இருள் சூழ முடியாத பிழம்பு; கவிதைக்கனலால் உணர்ச்சியைப் பெருக்கும் காய் கதிரவன்.

கவிஞன் :

ஓர் தனி மனிதன். கந்தலே அவனது ஆடை. மென்மையும், தூய்மையுமே அவனது உணவுப் பொருள்; இயற்கை அன்னையின் மடியிலே அமர்ந்து அமரகாவியங்களை சிருஷ்டி செய்யும் கர்த்தா. இரவெல்லாம் கண் விழித்து, கற்பனையைக் காவியமாகப் பிழிந்து தரும் உணர்ச்சியின் பிம்பம்.

கவிஞன் :

ஓர் உழவன். தன் நெஞ்சத்திலே உதிக்கும் கருத்துக்கள் என்னும் விதையை உணர்ச்சி என்ற நிலத்திலே தூவிப் பயிரிடுகிறான் அவை வளர்ந்து, மரமாகி, காய்த்துப் பழுத்து, கருத்தற்ற பாலைவனத்தையும் கனி குலுங்கும் சோலைவனமாக்குகின்றன.

ஆம்! இந்தக் கவிஞனைத்தான் சமுதாயம், அவனது வாழ்நாளிலே புறக்கணிக்கிறது; ஒதுக்கி வைக்கிறது. யுகப்புரட்சியை உண்டுபண்ணும் இந்தக் கவிஞன்தான், உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இடமின்றி நடைப்பிணமாக்கப் படுகிறான். அவன் கவனிப்பாரற்றுக் கிடக்கிறான்.

ஆனால்: அவன் சடலம் சாம்பலாகிவிட்ட பின்பே அவனது பெருமை உலகின் கண்களுக்குத் தெரிகிறது. அவனது புகழ் பாடப்படுகிறது. அவனுக்கு மணிமண்டபம் எழுப்பப்படுகிறது.

அவனது வாழ்நாளிலே அவன் மனித சமுதாயத்திடம் எதையுமே எதிர்பார்க்கவில்லை, ஒரு சிறு புன்னகையைத் தவிர—அவனது மூச்சுக் காற்று அத்தனையும் உணர்ச்சிக் காவியங்களாகத்தான் மாறின—ஆனாலும் மக்கள், அவனுக்கு வாழ்வளிக்க, வசதிகளைக் கொடுக்க மறுத்து விட்டனர்.

ஏ! மனிதனே!!

ஏ! சமுதாயமே!!

என்று தான் நீங்கள் உண்மையை உணரப் போகிறீர்கள்? உழைப்பின் பெருமையை, அதன் உன்னத சக்தியை அறியப் போகிறீர்கள்?

தாங்கள் பிறந்த பொன்னாட்டுக்காகக் கண்ணீரையும், செந்நீரையும் வடித்து, நிலத்தைக் சிவப்பாக்கிய மாவீரர்களுக்கு, தங்கள் உயிரையும் திரணமாக மதித்து, அதை அர்ப்பணித்து, நிம்மதியும், அமைதியும் தேடித்தந்த செம்மல்களுக்கு நினைவுச் சின்னங்கள் எங்கே?

ஏ! கொடுமைக் குணாளர்களே! என்று தான் நீங்கள் உயிரை வாங்கும் பழக்கத்தை விடப் போகிறீர்கள்? செக்குமாடு போல் தங்கள் வளமான வாழ்வை வளைத்துக் கொண்டுள்ள ஆயிரமாயிரம் மக்களை சித்திரவதையிலிருந்து எப்போது விடுவிக்கப் போகிறீர்கள்?

இருக்கும்போது வதைபட்டு, அடிபட்டு, துன்பத்திலே துடிதுடித்து இறந்தவர்களின் வரலாற்றைக் கொஞ்சம் நினைவிலே கொள்ளுங்கள்! இன்று அவர்களின் புகழ் பாடப்படுகிறது! கொடுங்கோலர்களே! அந்தப் புகழ், அந்த இன்பம், அந்தப் பெருமை உங்களுக்குக் கிடைக்காது! கிடைக்காது!! கிடைக்காது!!!

ஏ! கவிஞர்களே!!

வாழ்வின் வாழ்வே!

உயிர் சக்தியின் உணர்வே!!

உணர்ச்சியை உருவாக்கிய உத்தமர்களே!!!

நீங்கள் காலத்தை வென்றுவிட்ட தீரர்கள்! காலவெள்ளத்தின் கோரக் கொடுமைகளுக்கு உங்கள் உடல்தான் பலியாயிற்று!

ஆனால்...! ஆனால்...! உங்கள் புகழ் நின்று நிலைத்துவிட்டது.

மன்னனுக்கு மணிமகுடம்; கவிஞனுக்கு மலர் மகுடம்

மன்னன் கையிலே செங்கோல்; கவிஞனின் கையிலே எழுதுகோல்.

மன்னனுக்கு அத்தாணி மண்டபம்; கவிஞனுக்கு மணிமண்டபம்.

மன்னன் ஆளுவது மக்களை; கவிஞன் ஆளுவது உணர்ச்சியுள்ள இதயங்களை.

மன்னனுக்கு சிம்மாசனம்; கவிஞனுக்கு இதயத்திலே பீடம்.

மன்னனின் சாம்ராஜ்யம் எல்லையுடையது; அழியும் தன்மை கொண்டது.

கவிஞனின் சாம்ராஜ்யம் எல்லையற்றது; அழிவற்றது; ஆரம்பமும் முடிவும் அற்றது.

— சிந்தாமணி, பி. ஏ.

கேள்வி - விடை

கூடலரசன் பதிலளிக்கிறார்

ம. ந. இராமசாமி,
காந்திபுரம், கோவை.

தாங்கள் ஒரு மாஜிக் கம்யூனிஸ்டா? எந்த உணர்ச்சியால் உந்தப்பட்டு, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராக ஆனீர்கள்? எதனால் அக்கட்சியிலிருந்து வெளியேறினீர்கள்?

அல்ல; இரண்டாவது பகுதிக்கு விடை தேவையில்லையென்றாலும் ஒரு விளக்கம் கூறுகிறேன். தென்றலில் வெளிவந்த முதல் மூன்று கட்டுரைகள் ஒரு மாஜியின் பாணியிலே எழுதப்பட்டதால் உங்களைப் போலவே பலரும் இந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகியவர்களும் விலக்கப்பட்டுவிரட்டப்பட்டவர்களும் இருக்கிறார்கள்; அவர்கள் எழுதினால் சொல்லக்கூடிய சேதிகளைத்தான் என்னுடைய கட்டுரைகளின் கருப்பொருளாகக் கொண்டேன். கம்யூனிஸ்ட் கட்சியின் பல புத்தகங்கள் ஆதாரங்களாக இருக்கின்றன. 'ஜனசக்தி'யையும் அதன் வெளியீடுகளையும் படிப்பவர்கள் எல்லாம் கம்யூனிஸ்ட்கள் என்று உங்களைப் போன்ற அனுதாபிகள் எண்ணிக் கொண்டிருப்பதால் ஏற்படும் குழப்பத்திற்கு நான் பொறுப்பல்ல. 1944 முதல் நான் கழகத்திலே இருப்பவன்.

★

க. நடராசன், மதுரை.

கம்யூனிஸ்ட் கட்சியின் ரகசிய அறிக்கைகள் எல்லாம் உங்களுக்கு எப்படிக் கிடைத்தன?

இந்தியக் கம்யூனிஸ்ட்கள் தங்களின் பழையகாலப் பண்புகளை அச்சடித்து வைத்திருந்தார்கள். ரகசியக் குறிப்புகளைக்கூட பாதுகாத்து வைக்காமல் பழைய புத்தகக் கடைகளில் போட்டுவிட்டார்கள். அவைகளை நான் தேடி எடுத்தேன். உங்களுக்குச் சொன்னேன்; நீங்களும் தேடிப் பாருங்கள். சுவையான செய்திகளைத் 'தென்றலு'க்கு அனுப்பிவையுங்கள். மக்கள் மன்றத்திலே தெரிவிக்கப் பயன்படும்!

★

வே. கோதண்டன்,
சென்னை-21.

"தென்றலில் கம்யூனிஸ்ட்களைப் பற்றி வரும் அத்தனையும் ஆதாரமற்ற அவதூறுகள்" என்று முருகானந்தம் பேசினார். அது சரியா?

சரியல்ல; எல்லாக் கட்டுரைகளிலும் தேவையான சான்றுகள் தரப்பட்டுள்ளன. ஜனசக்தி வெளியீடுகள் கம்யூனிஸ்ட் தலைவர்களின் பேச்சுக்கள், எழுத்துக்கள், நடவடிக்கைகள் எல்லாம் துணையாக உள்ளன. மத்தியக் கமிட்டியின் தீர்மானங்களையும், மாற்றாரின் கருத்துரைகளையும் இணைத்துக் குறிப்பிடப்பட்டுள்ளது. தவறாகச் சொன்னால் கம்யூனிஸ்ட்களா இன்று வரையிலும் பதில் தராமல் இருப்பார்கள்? ஈட்டி முனைகளும்-உரைகல்களும் ஒதுங்குவது இதனால்தான்!

க. இராமகிருட்டிணன்,
மதுரை.

இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கு மொழிப்பிரச்னையில் நிரந்தரக் கொள்கை உண்டா?

கம்யூனிஸ்டுகள் மொழியைப் பற்றி நினைத்தது அண்மையில்தான். இதை ஒரு பிரச்னையாகவே அவர்கள் கருதவில்லை. இருபதாண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் இந்தியை எதிர்த்து மொழிப் போராட்டம் நடைபெற்றது. அப்போதெல்லாம் கம்யூனிஸ்ட்களுக்குத் தமிழைப் பற்றியும் தமிழர்களைப் பற்றியும் நினைக்க நேரமில்லை. கம்யூனிஸ்ட் கட்சி கருவிலே உருவாகி வந்த நேரமது! இன்று மொழியை விட்டால் வேறு வழியில்லையென்று தங்களுக்கும் மொழிப் பிரச்னையில் கவனம் இருப்பதாக காட்டிக்கொள்கிறார்கள்! சம்பளப் பிரச்னையென்றால் — சந்தா விசயம் என்றால் இதனை மறந்துவிடுவார்கள்!

★

க. இராஜேந்திரன்,
கான்சாமேட்டுத் தெரு,
மதுரை.

மாஸ்கோவுக்குப் போயிருக்கும் கம்யூனிஸ்ட் தலைவர்களிடமிருந்து நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?

எதையும் எதிர்பார்க்க முடியவில்லை; சங்கரன் சொல்லியபடி இவர்கள் அங்கே பார்வையாளர்கள் தான். குருச்ஷேவின் சர்வாதிகாரச் செயல்களைப் பற்றிப் பேச இந்தியக் காம்ரேடுகள் லாயக்கற்றவர்கள். இருந்தாலும் போயிருக்கிறார்கள் தங்கள் நன்றி மறவாத விசுவாசத்தைக் காட்டிக்கொள்வதற்காக! மலட்டோவ், புல்கானின், கண்ணிரைத் துடைப்பார்கள்!

★

சங்கரன்,
சங்கரன்கோவில் (நெல்லை).

"ஜனசக்தி" பத்திரிகையில் தோழர் ஜானகி அம்மாள் தோழர் பார்வதி என்று குறிப்பிடப்படுவது சரியா?

'தோழியர்' தேவையில்லை; 'தோழர்'தான் சரியென்று ஆசிரியர் ஜீவானந்தம் ஒரு கேள்விக்குப் பதில் சொன்னார். அவர் மிகப் பெரிய இலக்கிய மேதை! ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடு கிடையாதா என்று அவரிடம் கேட்டால் இல்லையென்பார். எல்லோரும் காம்ரேடுகள்; எனவே தோழியரையும் 'தோழர்' என்பார்! 'ஜனசக்தி'யில் விளக்கியபோதும் திருவாளர் திருமதி என்று கம்யூனிஸ்ட்களும் சொல்லிக் கொள்வது திராவிட முன்னேற்றக் கழகத்திடம் ஏற்பட்டுவிட்ட மயக்கம் என்றும், கம்யூனிஸ்ட்களிடத்திலே உள்ள அரசியல் பலவீனம் என்றும் ஒப்புக்கொண்டிருந்தார்! 'தோழியர் ஜீவா பேசுவார்-அல்லது பேசுவாள்' என்று 'தினத்தந்தி' நடையிலேகூட 'ஜனசக்தி'யில் செய்தி வரலாம்! எதிர்பாருங்கள்!

எஸ். பி. பாலன், சேலம்.

தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட் தலைவர்களில் எவருக்காவது அகில இந்திய பொதுக் காரியதரிசியாகும் தகுதி உண்டா?

ஜீவானந்தம், ராமமூர்த்தி, கல்யாணசுந்தரம் போன்றவர்கள் இதற்குப் பதில் சொன்னால் மிகவும் இனிமையாக இருக்கும். கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாண்டு வரலாற்றில் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட் எவரும் பொதுக் காரியதரிசியாக இருக்கவில்லை. இனிமேலும் இருக்கப்போவதில்லை. தமிழ்நாட்டுக் கமிட்டி வெங்கட்டராமனைக் கேட்டுப் பாருங்கள். அவருக்கும் 'அய்யங்கார்' தோழருக்கும் அந்தத் தகுதி உண்டா என்று?

★

ப. க. சீனுவாசன், குழித்தலை.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் கம்யூனிஸ்ட்களின் சாதனை என்ன?

கம்யூனிஸ்ட் கட்சி வெள்ளையனை வெளியேற்றும் வேலையில் சொந்தப் புத்தியுடன் செயலாற்றவில்லை காங்கிரசுக்கும் முஸ்லீம் லீகிற்கும் ஆய்வுரைகள் தருவதையே தங்கள் தொழிலாகக் கொண்டார்கள். கம்யூனிஸ்டுகள் என்று சொல்லிக் கொள்ளவே வெட்கப்பட்டுக் கொண்டுதான் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் ஒட்டிக்கொண்டிருந்தார்கள்! கம்யூனிஸ்ட் கட்சிதான் வழிகாட்டியாக உறுதுணைவனாக இருந்தது என்று இன்றைக்குப் பேசுகிறார்கள் என்றால் காலங்கடந்து கூறும் பொய்யுரையாகும்! "காந்தி-ஜோஷி கடிதப் போக்குவரத்துகள்", "மீண்டும் கூடுக", "பிரிவினை ஏன்?" போன்ற கம்யூனிஸ்ட் ஏடுகளைப் படித்துப் பாருங்கள். பழங்கால வரலாறு தெரியும்! சாதனை-ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூச்சல்தான்!

★

மா. அழகு, கூடலூர்.

"கொள்கை மாறிய நிலையில் கம்யூனிஸ்ட் காவல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்" என்கிறார்களே, அதன் பொருள் என்ன?

"முன்பு தலைமறைவாக இருந்து சதி செய்தோம், சர்க்காரைச் சூறையிட. இப்போது நாங்களே சர்க்கார் அமைத்திருக்கிறோம் நாங்கள் நடத்திய கொலை. கொள்ளை. தீயிடல் போன்ற செயல்களை மறந்துவிடுங்கள்" என்கிறார்கள் போலும்! நீங்கள் கம்யூனிஸ்ட் பத்திரிகையைப் பாருங்கள். காவல்கைதிகளின் பெயரும் தண்டனைக் காலமும் இருக்கும். ஏன் தண்டிக்கப்பட்டார்கள்? வழக்கு— கொலையா, கொள்ளையா. கொள்கையா, என்பதை எவருக்கும் எவரும் சொல்லவில்லை. ஏன் மறைத்துவைக்கிறார்கள். புரிகிறதா?

★ ★ ★

"வானொலி" பற்றி எழுது ஏடு

"திருச்சி, சென்னை வானொலி நிலையங்கள் ஆகாஷ்வாணி என்று இந்தியில் அழைக்கப்படும் வரை வானொலி நிகழ்ச்சிகளில் தாம் பங்குபற்றப் போவதில்லை என்று கவிஞர் கண்ணதாசன் சபதம் செய்துகொண்டார். தமது இந்த முடிவை அவர் திருச்சி, சென்னை வானொலி நிலையத்தார்க்கும் அறிவித்துவிட்டார்.

பொங்கலன்று நடந்த கவி அரங்கில் கவிஞர் கண்ணதாசன் பங்கு பற்றுவார் என்று முன்னர் குறிப்பிடப்பட்டிருந்தும், கடைசியில் அவர் பங்கு பற்றாததற்குக் காரணம் அவர் மேற்கொண்டுள்ள சபதம்தான் என்று தெரிகிறது.

ஏமாற்றமும் மகிழ்ச்சியும்

கவி அரங்கைக் கேட்டு ரசிகர் ஆவலோடு காத்திருந்த அனைவரும் கவிஞர் கண்ணதாசன் அதில் பங்கு பற்றாததால் ஏமாற்றம் அடைந்தனர். தரமான கவிதை, சுவையான பாடல் இல்லையே; கண்ணதாசன் கவி இடம் பெறாததால் அரங்கு இரண்டு சோபை இழந்துவிட்டதே-என்று வருந்தியவர்கள் ஒருவகையில் மகிழ்ச்சி அடையாமலும் இல்லை.

கவிஞர் கண்ணதாசன் தாம் மேற்கொண்ட முடிவால் தமது தமிழ்ப்பற்றையும் மனஉறுதியையும் மக்கள் எண்ணத்துக்கு மதிப்பளிக்கும் பெருந்தன்மையையும், கொள்கைச் சிறப்பையும் புலப்படுத்தியதே அவர்கள் மகிழ்ச்சிக்குக் காரணம். ஆகாஷ்வாணி என்பதை வானொலி என்று தனித்தமிழில் சொல்ல அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதற்கான பெரிய போராட்டத்தின் முதற்படி கண்ணதாசனின் நடவடிக்கை என்று கருதப்படுகிறது.

போராட்டத் திட்டத்தை வகுக்க, கடந்த 6-ந் திகதி சர்வ கட்சிக் கமிட்டி ஒன்று நிறுவப்பட்டது. முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் முதலான பெரியோர் அடங்கிய இந்தக் கமிட்டியே இளவழகன் என்ற இருபது வயதுடைய வாலிபரின் உயிரைக் காப்பாற்றியது.

— 1 -1-'59 'சுதந்திரன்." கொழும்பு

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

மறுத்துவிட்ட ஒரே காரணத்திற்காக இங்கேயுள்ள அரிவாள் சுத்தி அண்ணுச்சிகள் ஏகாதிபத்திய வாதிகளின் தூண்டுதலினல் ஏற்பட்ட கலவரம் என்று விளக்குகிருர்கள்! ரஷ்யாவின் நிழலில் உயிர்வாழுகின்ற இந்தியநாட்டுக் கம்யூனிசப்பிறவிகள் கழகத்தவரும் அவ்விதமே அடிமைக் கருத்துக்களுடன இருக்கவேண்டுமென்று விரும்புகிருர்கள். இல்லையென்ருல் அந்நியருக்கு இரையாகி விட்டார்கள் என்றும் கழகத்தவரைக் காட்டிக் கொடுக்கத் தயாராக முன்வருகிருர்கள்! சொந்த பலத்திலே நிற்கமுடியாமல் பீகிங்கையும் மாஸ்கோவையும் புகலிடமாகக் கொண்டுள்ளவர்கள் கழகத்தை இலண்டனுடன் பிணைத்துப் பேச ஆசைப்படுகிருர்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநாட்டுச் செய்திகள் ஒவ்வொன்றிலும் சொந்த நிர்ணயங்களுடன் தான் பங்கேற்கும். இவர் சொன்ஞர் அவர் சொன்ஞர் என்பதற்காகவோ–குருச்சேவின் உள்ளம் புண்பட்டுவிடும், மிகோயான் இதயம் வருந்தும், மாசேதுங்கின் புன்னகை குறைந்துவிடும், என்பனபோன்ற சில தனிப்பட்ட மனிதர்களின் உடல் நிலைகளுக்காகவோ தன் இலட்சியத்தை வைத்துக்கொண்டுள்ள கம்யூனிஸ்ட் கட்சியைப்போல என்றைக்கும் பணியாற்றப் போவதில்லை. ஒரே ஒரு உதாரணம்: அரபு நாடுகளின் கூட்டரசில் இணைக்கப்பட்ட நாடுகளுக்காக பரிபூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் சென்னை பிராட்வேயிலிருந்தே தந்துகொண்டிருந்த கம்யூனிஸ்டுகள், சிரியாவிலே யிருக்கும் கம்யூனிஸ்டுகளை எகிப்தின் அதிபர் நாசர் மிக மிக வன்மையாகக் கண்டித்தவுடன், அவர்களின் துரோகச் செயல்களையும் எடுத்துக் காட்டியபின் இப்போது எகிப்தைப்பற்றிப் பேசுவதையே மறந்துவிட்டார்கள். இவர்களின் குருச்சேவ் ஏதாவது நாசரை மறுத்துப் பேசுவாரா என்று எதிர்பார்த்து ஏங்கித் தவிக்கிருர்கள்! ஆனல் கழகம் எகிப்து நாட்டு அரசியலைக் கணக்கிட்ட முறை சூயஸ் கால்வாய்நடவடிக்கையிலிருந்துஒரே மாதிரியாகவே இருந்து வருகிறது. நாசருடைய உதவியை நாடுகிருர்கள் என்றுகூடச் சொல்ல விரும்புவார்கள்! "நாசரைப் பாராட்டி ஆதரித்தோம். ஆனல் இன்றைக்கு கம்யூனிஸ்ட்களைக் காரணமின்றி கண்டிக்கிருர் நாசர்" என்று கண்ணீர் வடித்துக் கதறியவர்களும் கம்யூனிஸ்ட்கள்தான்! ஆங்கிலோ அமெரிக்கக் கூட்டணியை உடைக்கமுனையும், ஆசிய ஆப்பிரிக்கப் பிரதிநிதிகளான காம்ரேடுகள் நாசரின் பொன்மொழிகளைக் கேட்டுத் துடிப்பதேன்? திராவிட நாட்டு விடுதலைக் கொள்கையை உலக நாடுகளின் கவனத்திற்குக் கொண்டு வர நினைப்பதும் அதற்காகப் பேசுவதும் அந்நியர் உதவிபற்றிய நப்பாசையென்று மட்டரக மனப்பான்மை கொண்ட மாஜினியைப் போன்றவர்கள் சொல்வார்களானல், அவர்களைக் கேட்கமுடியும்:நவசீனவை உலக நாடுகளுடன் ஒன்ருக மதித்துச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று வாஷிங்டன்நகரத்து வீதிகளில் எல்லாம் சோவியத் பிரதிநிதிகளும் செஞ்சீனத்தின் தூதுவர்களும் இன்றளவும் வேண்டித்தவம் இருந்து மண்டியிட்டுக் கேட்டுக் கொள்வதும் ஆங்கில அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளிடம் நவசீனத்தை அடகு வைப்பதாகிவிடுமா? சைப்ரஸ் விடுதலைக்கு உலக மக்களின் வாழ்த்தைப் பெற விரும்பும் மகாரியஸ் பாதிரியார் அந்நியர் உதவிக்காக தன்னுடைய கொள்கையை-இலட்சிய எல்லையை மறந்தவரா?

திராவிட முன்னேற்றக் கழகத்தவரின் இலட்சியம் வெளியார் தலையீட்டினல் மகத்துவம் பெறக்கூடிய தன்மை படைத்ததல்ல. நிதியமைச்சரும் வெளியார் தூண்டுதல் என்று துடுக்குத்தனமாகப் பேசினர். ஆதாரத்துடன் நிரூபித்துவிட முடியுமா என்று அறிஞர் அண்ணு அவர்கள் கேட்ட கேள்விக்கு அந்த கோவைக் கோமான்-கோமாளிகளின் தலைவர் இன்றுவரையிலும் பதில் தரவில்லை? ஆனல் ஜனசக்திக்காரர்கள் பாரதப் பண்பையும் ஜனநாயக மரபையும் இந்திய மண்ணிலே காக்க அந்நியத் தலையீட்டை தடுத்தே தீருவார்களாம்! பிலாய் உருக்குத் தொழிற்சாலையா–அதில் மாஸ்கோ தலையிட வேண்டும். நெய்வேலியில் நிலக்கரிச் சுரங்கமா–அதில் மாஸ்கோ முத்திரையிருக்க வேண்டும். இந்திய சர்க்காரின் வெளிநாட்டுக் கொள்கையா–அதில் குருச்சேவின் முகம் தெரிய வேண்டும். இந்தியாவில் கூட்டுப் பண்ணை முறையா–அதில் மாசேதுங்கும் அவரது திட்டங்களும் ஒளிவிட வேண்டும் டில்லியிலிருந்து யாராவது இலண்டனுக்குப் போகவேண்டுமா? அவர்கள் முதலில் பீகிங் போய் அங்கிருந்து மாஸ்கோ போய் கிரம்ளின் மாளிகை வாசிகளிடம் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டு அதன் பிறகுதான் லண்டனுக்கும் வாஷிங்டனுக்கும் போகவேண்டும். இப்படியும் இவற்றிற்கு மேலும் அந்நியர் தலையீட்டை தலைமீது தாங்கி நிற்கும்தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்கள் தான் திராவிட முன்னேற்றக் கழகம் அந்நியர் உதவியை அழைக்கிறது என்கிருர்கள்! பாகிஸ்தான் பாதகம் பாரீர் என்று பண்பாடுகிருர் பத்தினி தன்மையிழந்த பரிதாபத்துக்குரிய ஒருவர். பாகிஸ்தானிலேயிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சியும் அன்றிலிருந்து இன்றுவரை எதுவும் பேசவில்லை. பேசுவதற்கு வேண்டிய துணிவை இந்தியக் கட்சியும் தரமுடியவில்லை. கராச்சியிலேயிருக்கும் சோவியத் தூதரும் இவர்கள் பக்கம் பார்வையைத் திருப்ப மறுக்கிருர். இவர்களையெல்லாம் தீண்டத் தகாதவர்களாக ஒதுக்கித் தள்ளுகிருர்! ஆனல் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகளுக்கு மட்டும் அயூப்கானை பிடித்து இழுத்துவந்து இவர்களுடைய மத்திய கமிட்டிக்கு முன்னல் நிறுத்தி விசாரிக்க வேண்டும் என்கிற அளவுக்கு ஆசை துளிர்விட்டு வருகிறது. அந்த ஆசையால் கொள்கைத் தடுமாற்றங்களில் ஊறித் திளைத்துப் போயிருக்கும் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது தருவதற்குச்சரியான வசைமொழிகள் இல்லாத காரணத்தால் அந்நிய உதவிக்கு நாம் அச்சாரம் போட்டிருப்பதாக ஒரு அவதூறைத் தந்துள்ளார்கள்! பாபம், மாஜினிகள் நம்மை புரிந்துகொள்ள முடியாத கோளாறினல் புலம்பித் திரிகிருர்கள். புண்பட்ட அந்த நெஞ்சங்கள் தாமதமாகத்தான் தெளிவடைய முடியும்!

—கூடலரசன்

ராஜாபார்லி
பிஸ்கட்ஸ்
• குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
ஏஜ:வ.சங்குபின் ஊ.15,திண்டுக்கல்ரோடு,மதுரை •

— 4-ம் பக்கத் தொடர்ச்சி —

அக்காளிடமிருந்து அந்த முறையீடு எழுந்தது.

வெகு நேர மௌனத்திற்கு பின்பு வேதநாயகத்திடமிருந்து பதில் வந்தது;

"என்ன செய்துவிட்டான்?"

"செல்லம் நாலு மாசமாக குளிக்காமல் இருக்கிருள்."

"நல்லதாகப் போயிற்று"

"வேதம், நீயா இப்படி சொல்வது?"

"ஆமாம்.நான் அவன் அண்ணன். பர்வதத்தையும் முத்தையும் பெற்ற தந்தை!"

"அவ்வளவுதாஞ?"

"அவ்வளவுதான்!"

"அப்படியென்ருல், என் உயிர் கிடப்பதுவரையில் அவனுக்கு இந்த வீட்டில் இடமில்லை"

"ஓ...அவ்வளவுதானே! தம்பி, இப்படி வா. செல்லத்தை அழைத்துக் கொண்டு இப்பொழுதே புறப்படு. நீ எங்கிருந்தாலும் என் துணை எப்பொழுதும் உண்டு"

அவ்வளவுதான் பேசினர். பிறகு அவர் தோட்டத்தில் மௌனச் சிந்தையில் ஆழ்ந்தபோது நாள் இருட்டிவிட்டது.

5

மழை இருண்டுகொண்டு வருகிறது. இன்றைக்கெல்லாம் தீராத மழையாக வந்துவிட்டால் குமிழிகளில் கறை வெடித்து உருண்டது–நினைவு...

"அந்தத் துயரக் குலைவு வீட்டில் சூன்யத்தை வளர்த்தியது. ஆவுடை போய் மாதக் கணக்கில் ஆயிற்று. மாலையம்மாளுக்கும் வேதநாயகத்துக்கும் பேச்சு வார்த்தையில்லை.பர்வதம், மனதில் இருண்டுக்கொண்டு, உயிர் ஒட்டிக்கொண்டிருப்பதினல் வாழ்பவளாக வெறும் வெளியில் பார்வையை நட்டு வாழ்ந்தாள். அரவமற்ற சுவரில் சிட்டுக்குருவிப்போல, ராசுமட்டும், அழுதும் சிரித்தும் வீட்டின் காரணமற்ற மௌனத்தின் நிலையை புரிந்துக் கொண்டவள்போல அடங்கியும் கலகலத்துக்கொண்டிருந்தாள். வீட்டின் ஒவ்வொரு உயிருக்கும் அவள்தான் தொடர்பாக அமைந்தவள். தந்தையின் அறையில் உணவு கொண்டு வைப்பது, அக்காளுக்கு நல்ல கதையாகச் சொவ்வது அத்தைக்கு கைவேலைக்கு உதவுவது எல்லாம் அவள்தான்.

"இருளில் இருள் கவிந்ததுபோல, ராசு என்ற அந்த ஒரே ஒரு உணவிற்கும் வினை வந்தது. அடி மரம் கெட்டுவிட்டால் நுனியின் தளிர் எஞ்சாததுபோல, மழையில் நனைந்த காய்ச்சலில் நாலு நாட்களாகப்பாயில் படுத்தாள். ஐந்தாவது நாள் வேதநாயகத்தின் மடியிலேயே உயிர் போய்விட்டது. அவள் அறையில் புத்தகங்கள் அடுக்குக் குலைந்து விழுந்து கிடந்தன!

"வாழ்வு முடிந்தது. அவ்வளவுதான். முடித்து வைத்த மழை இன்னும் பெய்துகொண்டுதான் இருந்தது. மடியில் கனத்த வெறுமையை பாயில் கிடத்திவிட்டு அப்படியே இறங்கிப் புறப்பட்டுவிட்டார் வேதநாயகம். அந்த நிமிர்ச்சி குனிந்து போயிற்று!

"தம்பி! மழையில் எங்கேயடா போகிருய?" என்று அழுகைக்கு இடையில் கேட்ட மாலையம்மாளின் குரல் மழை யோசையில் அமிழ்ந்து போயிற்று. பர்வதம் பிரமையின் உருவாக அமர்ந்திருந்தாள். அழாத சோகம்!

வேதநாயகம் போய்விட்டார். சுற்றமும் உற்ருரும் வந்து நடக்க வேண்டியதை நடத்திய போதும் அதன் பின்னரும் வேதநாயகம் வரவே இல்லை!

மறு நாள் ஆவுடை வந்தான்.

"வேதம் எங்கேயோ போய்விட்டானே தம்பி!" என்று, பழைமையெல்லாம் மறந்து அவனைக் கட்டிக் கொண்டு அழுதாள் மாலையம்மாள்.

ஆவுடைக்கு அண்ணனின் அந்த மறைவின் புதிர், புரியாத இருளாக மனதில் கனத்தது. அன்று மாலை அண்ணனின் ஒரே ஆறுதல் இடமான தோட்டத்தைப் பார்க்கப் போனபோது– எல்லையில்– ஆற்றுச் சார்புக்கு எடுப்பாகவும் தோட்டச் சுவராகவும் நின்றிருந்த பெரிய மண்மேடு. மூலையில் கொய்யா மரத்தின் கிளையை முறித்துக்கொண்டு விழுந்து கிடந்தது. அண்ணனின் லட்சியங்களின் குலைவாக அதைக் கருதி ஒதுக்குப் புறமான அந்த இடத்தை அப்படியே விட்டுவிட்டான் ஆவுடை! காலம் மறதியை வளர்த்திக்கொண்டு நீண்டது.

6

வானம் தெளிந்து முகில் விலகிற்று. முற்றத்தில் நீர்த் தேக்கம் குறைந்துக்கொண்டே வந்தது. குமிழிகள் நுரையில் கலந்து சிறியவைகளாகக் குறைந்துவிட்டன. நினைவு, நிழலில் வேகத்தைச் சேர்த்து, கதைக்குத் திரும்பிற்று.

"வேறு துணையற்ற நிலையில், வீட்டின் பொறுப்பு. ஆவுடையிடமே திரும்பிற்று. செல்லம், கைக் குழந்தையுடன் வந்து குடியேறினுள்."

"குழந்தையா?"

"ஆமாம். நீதான் இன்றைய இலட்சியமான நீதான் அன்று குழந்தை! பர்வதத்திற்கும் மாலையம்மாளுக்கும், வீட்டின் இருளுக்குப் புதிய கை விளக்குக் கிடைத்துவிட்டதுபோல குழந்தை கிடைத்தது மகிழ்ச்சியைத் தந்தது.

"எங்கோ எப்படியோ தடைபெற்று நின்று போன பிரயாணம் பின்னும் துவங்கிற்று. எனினும் வாழ்வை முடித்து மறைந்து போன துயரங்களைக் காட்டிலும் முடியாத வேதனையில் மழையில் இறங்கிப் போன வேதநாயகத்தைப்பற்றிய சிந்தைகள் அடிக்கடி, குன்றிய விசாரத்திற்கு எண்ணெயிட்டு எரித்தது!

"ஆறு மாசத்தை இழுத்தடித்துவிட்டு மீண்டும் எதற்காகவோ அந்த மழை வந்தது. வந்து ஓய்ந்துவிட்டது. காலம் தவறிய மழை ஒரே நாளில் கடமையை முடித்துக் கொண்டது. உருக்கிய வெய்யிலில் பாழ்த்துப் போன தோட்டத்தை, ஒரு நாள் மழையின் நனைவில் சற்று திருத்திவிட்டால் என்ன என்ற யோசனை எப்படியோ ஆவுடை மனதில் எட்டியது. வேலையாட்கள் வந்தனர்.

மண்ணை சேர்த்து சேர்த்து வந்தபோது ஆற்றின் அந்த சுவர்ப் புறத்தில் திட்டாக எஞ்சியிருந்த மண்ணிற்கடியில் வெள்ளையாக நீண்ட எலும்புக்கூடு...ஆறடியோ அதற்கு மேல் ஒன்றிரண்டு விரல்களோ அதிகமான நீளத்தில் விழிக் குழியில் இருட்டைச் சுமந்துகொண்டு...

"அந்தக் கதை இலட்சியத்தின் கதையோ என்னமோ சொன்னேன். நினைவில் நிறைத்துக்கொள்! நீ இலட்சியவாதியாகப் போகிருயா?"

"அப்படித்தான் நினைக்கிறேன்!"

என்ன ஜாதி என்று சொன்னேன்!

"அவளையே மணக்கப் போகிருயா?"

"ஆமாம்! இன்றையச் செயல்கள் நாளைய வளர்ச்சிக்கு வளமாகஅமையுமென்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது!"

குமிழி உடைந்தது. பிறகு இல்லை. நீர் வற்றிப் போயிற்று! ★

வெண்பாப் போட்டி

34. தனிச்சீர் : விற்கொடியோன்

நற்றமிழின் பண்பாடு நானிலத்தோர் போற்றிடவே
கற்ற கவியனைத்தும் காவியமாய்—விற்கொடியோன்
உற்ற தலைமயனும் ஓங்கும் இளங்கோதான்
பெற்ற சிலம்பெனவே பேசு.

—நெல்லைக்கபிலன், சென்னை-5.

செற்ருர் அடுகளத்தில் சிந்து குருதிதனில்
அற்றை வரலாற்றை ஆக்கியோன்—விற்கொடியோன்
ஆண்டபுகழ் மீள அடிமைத் தளையறுக்கப்
பூண்டிடுவாய் போர்க்கோலம் போ.

—கு. இரமாதேவி, சென்னை-1.

பொற்கொடியே! யான்வஞ்சிப் பூமானைக் காண்டலின்
சொற்கடிந்தாள் என்னன்னை; சோர்வுற்றேன்—விற்கொடியோன்
ஏன்போந்தான் இவ்வழியே ஏன்புகுந்தான் என்விழியே
வீண்பகையே என்னில் விளைத்து.

—தமிழ்க்கோவன், சேலம்-2.

கற்கண்டும் தேனும் கனியும் கனிந்தொழுகும்
சொற்கொண்டு பல்சுவையும் தோன்றிடவே—விற்கொடியோன்
தம்பியவன் செந்தமிழில் தாரணிக்குக் கண்ணகியின்
அங்கதையைத் தந்தான் அமைத்து.

—குகன்குருசாமி, கமுதி.

கற்பே புலிக்கொடியோன் கண்ணகியாம்; கற்பொளியால்
பற்றி எரிந்ததடா பாண்டிநகர்;—விற்கொடியோன்
விந்தியத்தைத் தாண்டி விசயனையே வென்றதுவும்
பந்தமுள்ள பத்தினிக்காம் பார்.

—தென்றல் இராமலிங்கம், சென்னை-6.

நற்றமிழ் காத்ததோடு நானிலத்தார் போற்றுகின்ற
பொற்சிலம்புக் காவியத்தைப் பூமிதனில்—விற்கொடியோன்
பெற்றமகன் யாத்திட்ட பெற்றிதனைப் போற்ருரை
நற்றமிழ்த் தாய்நகுவாள் நைந்து.

—முல்லை, தொ. கோட்டாம்பட்டி.

தெற்கின் புகழ்காத்துத் தீந்தமிழர் பேர்காக்க
வெற்பிற் கொடிநாட்டி வென்றெழுந்தான்!—விற்கொடியோன்
போர்வலிக்கு நேருண்டோ? பூவுலகில் பாவேந்தன்
பேர்இளங்கோ வென்றெடுத்துப் பேசு!

—பொ. ந. கலியபெருமாள், வடலூர்.

பொற்புடமும் மாசுறலாம் பொய்கையிலும் நீர்கெடலாம்
கற்பினிலே பெண்தாழக் காணுவரோ?—விற்கொடியோன்
வீரத்தின் பேர்சொல்ல வேட்கவில்லை; கண்ணகியின்
சிருக்கே தந்தான் சிலம்பு.

—விஜயமல்லிக மறைவல்லிவேட்டான், துறையூர்.

கொற்றவனை நாயகராய்க் கொண்டனமுன் காப்பியங்கள்
நற்றமிழ்த்தாய் பொற்'சிலம்பை' நாடாளா—விற்கொடியோன்
முற்றும் புதுமையுடன் முக்கியமாய்த் தான்வைத்தே
அற்புதநூ லாக்கினனே ஆம்!

—அ. வே. காசிநாதன், மணவாசி.

வெற்றி பலகண்ட வேந்தனடா பத்தினிக்கு
நற்கோயில் கட்டியநல் லேந்தலடா—விற்கொடியோன்
நல்வழியில் வந்தவனே! நாட்டில் வடவரெனும்
புல்லருக்கா ஆட்சி புகல்.

—கேசரிக்கண்ணன், கோவை.

பற்றலர்கள் மெய்நடுங்கப் பார்முழுதும் தான்புகழ
நற்றமிழின் காவலர்கள் நாடிவர—விற்கொடியோன்
வாழ்ந்த தறிந்தும் வடவருக் கேன்பணிந்தாய்
ஆழ்ந்து சிந்தித் தறி!

—ரஹீம்கான், பல்லடம்.

குற்றமில்லாக் கோவலனைக் கொன்றமன்னன் நாடுதனைக்
கற்பழலால் சீரழித்த கண்ணகிக்கு-விற்கொடியோன்
சற்கோயில் கட்டுவித்தான்; கன்னித் தமிழுக்கே
அற்புதச்சி லம்போர் அணி.

—அருந்ததி, அமிர்தராயன்கோட்டை.

சுற்ற மிழந்து சுகமிழந்து நாடோடிக்
குற்றேவல் செய்து குமைகின்ற,—விற்கொடியோன்
பெற்ற திருநாட்டார் புன்மையினைப் போக்காத
அற்பர்க்கிங் கேனோ அரசு?

—ஆதி. சானகிராமன், பண்ணுருட்டி.

நற்றமிழ் நாடு நலிந்துமே போனாலும்
வற்ருத் தமிழென்றும் வாழ்ந்திடுமே!—விற்கொடியோன்
ஆட்சி மறைந்தாலும் அன்னார் பெருமைதனைக்
காட்டிடுமே கண்ணகியின் கல்.

—சு. நீலகண்டன், அருப்புக்கோட்டை.

விற்றிறத்தில் வல்லோன் விசயனும்! பீற்றுகின்ருர்
மற்றிறத்தில் மாவீமன் வல்லோனும்!—விற்கொடியோன்
சேரன், மறச்சோழன், திண்தோளன் பாண்டியன்தம்
வீரத்தைத் தாமறியார் வீண்!

—கு. ம்திமன்னன், போடி. கயற்கண்ணிபுரம்.

நற் குலத்தில் நீபிறந்தும் நாடெங்கும் கையேந்தும்
அற்பத் தொழில்கற்ருய் யாதுக்கோ?—விற்கொடியோன்
தன்மானம்; வீரம்; தருமகுணம் கண்டிருந்தும்
இங்கிலைநீ யேற்றதுவும் ஏன்?

—க. புனிதா, பாளைநகர்.

கற்பென்றும் மாருத கண்ணகியே, கற்பகமே!
வற்ருத் தளிரழகின் வார்ப்படமே—விற்கொடியோன்,
நின்கற்பின் சீர்த்தி நிலைத்துப் புகழோங்க
உன்னிச் சிலைவடித்தா னே?

—எஸ். கே. மூர்த்தி, விருத்தாசலம்.

மற்போரில் விற்போரில் மாண்புமிகு சொற்போரில்
கற்ருேரும் போற்றிக் களித்திடவே—விற்கொடியோன்
நற்றமிழில் கோலோச்சி நல்லணங்கு கண்ணகிக்குக்
கற்சிலையைத் தான்செய்தான் காண்.

—வி. பாலசண்முகம், சென்னை-7.

அற்பர் வடவர் அருந்தமிழைத் தாழ்த்திடவே
வெற்பினை யொத்த வியன்ருேளன்—விற்கொடியோன்
ஒல்லையிற் சென்ருெறுத்தே ஒன்னலர்தஞ் சென்னியின்மேல்
கல்லேற்றி வந்தானே காண்.

—தி. சீனிவாசன், குல்லூர்சந்தை.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு